பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 தை 07 திங்கட்கிழமை (21.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 56

# தீவிர ஆலோசனையின் பின்னரே தீர்வு யோசனையை அரசு ஏற்கும்

## மாற்றங்களுடனேயே நாடாளுமன்றம் வரும் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜனவரி 21

**அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவால் புதன்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால அறிக்கையை அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளாது.**

**அந்த யோசனைகளை முழுமையாக நான் ஏற்றுக்கொள்வேன் என எவரும் எதிர்பார்க்கக் கூடாது. தரப்படும் யோசனைகளை முற்று முழுதாக துருவி ஆராய்ந்து அவற்றில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை செய்த பின்னரே இறுதி வடிவம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் - இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் தைப்பொங்கல் விழா இடம்பெற்றது. இவ் விழாவில் கலந்துகொண்டதன் பின்னர் அவர் செய்தியாளர்களுடனான சந்திப் பொன்றை நடத்தினார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

23 ஆம் திகதி அனைத்துக் கட்சிப் பிரதி நிதிகள் குழுவின் யோசனைகளை என்னிடம் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளேன். அவற்றை முழுமையாக ஆராய்ந்த பின்னர்

(10ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நாடகமே புதனன்று கையளிக்கப்படும் தீர்வுத்திட்டம்

## கடுமையாக எதிர்ப்போம் என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஜன. 21

அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவால் புதன்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ள அரசியல் தீர்வுத்திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கின்றது.

முன்வைக்கப்படும் தீர்வுத்திட்டம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்ற - அவர்களை முழுமையாகத் திருப்திப்படுத்துகின்ற - தீர்வுத்திட்டமாக இல்லாவிட்டால் அதைப் பரிசீலித்துக்கூடப் பார்க்கமாட்டோம்.

- இவ்வாறு காட்டமாகக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா, மன்னாரில் நேற்று மோதல்கள்

கொழும்பு, ஜன. 21

வடக்கின் பல்வேறு முன்னரங்க நிலைகளில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று மோதல்கள் இடம்பெற்றுள்ளன. வவுனியா பெரியதம்பனைப் பகுதியில் இடம்பெற்ற மோதலின்போது இரு விடுதலைப்புலிகள் உயிரிழந்துள்ளனர்.

மன்னார் அடம்பன் பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது இரு பெண் விடுதலைப்

(10ஆம் பக்கம் பார்க்க)

# லூயிஸ் ஆர்பர் பயங்கரவாதத்தை தூண்டுவதாக ஜே.வி.பி. கண்டனம்

## புதனன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 21

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சிலின் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர், சமீபத்தில் தெரிவித்த கருத்துகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை மறுதினம் (23ஆம் திகதி) ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றைக் கொழும்பில் நடத்த உள்ளனர்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலர்-விமல்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு உள்ளூராட்சித் தேர்தல்

# இடைக்காலத் தடை கோரும் மனுக்கள் இன்று விசாரணைக்கு

கொழும்பு, ஜன. 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப் படவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு இடைக்காலத் தடை உத்தரவை வழங்குமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இம்மாதம் 14 ஆம் திகதி கொழும்பு உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இன்று நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இம்மனுக்களை அகில இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகமும் எம்.பியு

(10ஆம் பக்கம் பார்க்க)

# மொனறாகலை தாக்குதலை நடத்தியோரிடம் நவீன ரக தொலைத் தொடர்புச் சாதனங்கள்

## அதனைக் கண்டவர்கள் விரைவில் செய்திவரும் என்று மற்றவர்களிடம் கூறினர்

கொழும்பு, ஜன. 21

மொனறாகலை மாவட்டத்தில் தாக்குதல் நடத்தியவர்கள் நவீன ரக தொலைத் தொடர்புக் கருவிகளை வைத்திருந்தனர் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' வார ஏடு தகவல் வெளியிட்டுள்ளது.

புத்தல தாக்குதல் குறித்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு:-

கொழும்பில் இருந்து 238.4 கி.மீ தூரத்தில் மொனறாகலை மாவட்டத்தில் உள்ள புத்தல பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (15ஆம் திகதி) இராணுவச் சீருடையுடன் மூன்று பேர் வெலிபுரச் சந்தி வீதியைக் கடந்து செல்வதனைக் கிராமவாசி ஒருவர் பார்த்தார். அந்தக் கிராமம் ஒக்கம்பிட்டியப் பகுதியின் முனையில் உள்ளது. கடந்து சென்றவர்கள் இராணுவத்தினர் என்றே அவர் நம்பினார். ஒருமணி நேரத்தின் பின்னர் அவர் கிராம சேவையாளரை நேரில் சந்தித்து தாம் கண்டவற்றினைக் கூறியுள்ளார்.

அந்த நபர்களை அரை மைல் தொலைவில் இருந்தே தாம் கண்டார் என அவர் கிராம சேவையாளரிடம் தெரிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து கிராமசேவையாளர் புத்தல பகுதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்திற்கு இந்தச் சம்பவத்தைக்கொண்டு சென்றார். காவல்துறை அதிகாரி 12 பொலிஸாருடன் அந்தப் பகுதிக்குச் சென்று கிராமவாசியிடம் விசாரணைகளை நடத்தினார்.

வெல்பர சந்திக்குக் கிராமவாசியை அழைத்துச்சென்று திசையை காண்பிக்குமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். பின்னர் இராணுவத்தினர் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் சென்ற பாதை வழியாக சிறிது தூரம் சென்ற பொலிஸார் திரும்பிச் சென்றுவிட்டனர். எனினும் இராணுவத்தினரின் நடமாட்டத்திற்கான எந்தத் தடயங்களும் இருக்கவில்லை.

கடந்த புதன்கிழமை காலை (16ஆம் திகதி) 6.45 மணியளவில் ஒக்கம்பிட்டிய வைத்தியசாலையில் சிற்றூழியரான மனல் விஜேசிங்க என்ற பெண் வேலைக்கு மோட்டார் சைக்களில் சென்றுகொண்டிருந்தபோது இராணுவத்தினர் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களை வெலிபர சந்தியில் கண்டார். அவர்களில் சிலர் நின்று கொண்டிருந்தனர். சிலர் மரத்தின் பின்னால் மறைந்திருந்தனர். தனது மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கிய அவர், இராணுவத்தினர் போன்று நின்றவர்களை நோக்கி நடந்துசெல்ல ஆரம்பித்தார். அப்போது அவர்களில் ஒருவர்தமக்கருகில் வரவேண்டாம் என்றுசைகை மூலம் காண்பித்தார். அவர்களின் அணுகு முறைகள் அவர்கள் ஒரு பதுங்கித் தாக்குதல் சம்பவத்

(10ஆம் பக்கம் பார்க்க)

# கருணாவுக்கு 2 வருடச் சிறை

லண்டன், ஜன. 21

பிரித்தானியாவிற்குள் இராஜதந்திரிகளுக்கான போலிக் கடவுச்சீட்டுடன்நுழைந்த, இலங்கை துணை இராணுவக்குழுக்களின் தலைவர்களில் ஒருவரான கருணாவிற்கு 24 மாத சிறைத்தண்டனையை பிரிட்டிஷ் நீதிமன்றம் விதித்துள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PC PARK (PVT) LTD.
நெல்லியடி

வடமராட்சி மண்ணில்
புதியதோர் கணினிக் காட்சியகம்

நிகழும் தைத் திங்கள் 22.01.2008 தைப்பூச திருநாளன்று
காலை 11.05 - 12.35 மணிவரையுள்ள சுபநேரத்தில்
திரு.V.தில்லைநாதன்
(முகாமையாளர், இலங்கைவங்கி, நெல்லியடி)
அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கிறது.
தங்கள் வருகையையும் மேலான ஆதரவையும் வேண்டி நிற்கிறோம்

130ஏ, காலி வீதி, தெகிவளை. தொ.பே:-011 2714115 தொ.நு:-011 2713423
பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி. தொ.பே:-0773951628
இல. 633, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:-021 -2229581 தொ.நு:-021 -2229581

## ஈரவிழிகளில் பதின்மூன்றாண்டுகள்



### அமரர் ஏரம்பு சோதிலிங்கம்

(மண்டைதீவு - 08)

அன்னை மடியில்
05 . 04 . 1926

ஆண்டவன் திருவடியில்
15 . 01 . 1995

திதி: பூர்வபக்க சதுர்த்தசி (21.01.2008)

அன்பின் சிகரமே ஆற்றலின் உறைவிடமே
பண்பின் இருப்பிடமே பாசத்தின் நிறைகுடமே
நீதியின் காவலனே வீரத்தின் விளைநிலமே
பார்புகழும் உத்தமனே குலம் சிறக்க வந்துதித்தவனே
குடும்பத்தின் குலவிளக்கே உயர்வுக்காக அர்ப்பணித்தவனே
பதின்மூன்றாண்டுகளென்ன பலநூறு ஆண்டானாலும்
ஆறுமோ எம்துயர் வெந்தழிகிறதே எம் ஆன்மா!
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆறாத்துயரில் நீந்தும்
அருமை மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரி, மைத்துனர்.

2/2, நீராவியடி,
யாழ்ப்பாணம். (70356)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி இராமலிங்கம் தங்கம்மா

*(பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)*

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த *தங்கராசா விமலாதேவியின்* அன்புத் தாயின் திடீர் மறைவையொட்டி துயர் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (70362)

பத்மநாதன் கனகாம்பிகை
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை
ஆசிரியை செல்வி ஞா. வளர்மதி அவர்களின் அன்புத் தந்தை

### தசாவதானம் ஞானசேகரம்

அவர்கள் 19.01.2008 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இயற்றாலை
அ.மி.த.க. பாடசாலை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நாகலிங்கம்



(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் தற்போது நுணாவில் மத்தியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகலிங்கம் நேற்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகாமசுந்தரி அம்மாவின் அன்புக் கணவரும், அமிர்தலிங்கம், சொர்ணலிங்கம், சிவனேஸ்வரி, இராஜேஸ்வரி, சிவகுமார், உதயகுமார், கெங்கேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாரதாதேவி, சிவஞானம், ஐயாத்துரை, தம்பிராசா, செல்வரதி, மங்களேஸ்வரி, வைத்திலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.01.2008) திங்கட்கிழமை பி.ப.1 மணிக்கு தற்காலிக முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜன.21

ஏழாலை வசந்த நாகபூசணி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

## தைப்பூசத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜன.21

கோட்டை முனீஸ்வரர் ஆலய தைப்பூசத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு உருத்திரா அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நண்பகல் அன்னதானம் இடம்பெறும். யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் உபயமாக இத்திருவிழா நடைபெறுகிறது.

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில மற்றும் இலக்கணம் By: விக்னேஸ்வரன் ஆச்சாரி 406 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.
(70387) " The Royal is The Best"

## மரண அறிவித்தல்

### திருமதி தனலட்சுமி விநாசித்தம்பி

(தோரையடி, அளவெட்டி)

பர்மாவைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, மற்றும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி விநாசித்தம்பி நேற்று முன்தினம் (19.01.2008) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு விநாசித்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் அமரர் Dr.முருகேசம்பிள்ளை, நல்லதம்பி மற்றும் சுப்பிரமணியம்(பொறியியலாளர், கொழும்பு), அமரர் வைரமுத்து (ஓய்வுபெற்ற பிரதான மருந்தாளர்) மற்றும் சதாசிவம் (ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் மல்லிகேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி ஸ்ரீஜெகதேவி, வேதநாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.01.2008) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. சதாசிவம்,
திரு. திருமதி சந்திரகாந்தன்,
திரு. திருமதி சிவலோகநாதன்
30/1, குமாரசாமி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். தொ.பே. 3716

## உதைபந்தாட்ட போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட அணிகளுக்கிடையே இடம்பெற்ற வலய மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

14 வயதுப் பிரிவு

முதலாம் இடம் - நாவற்குழி ம.வி, 2ஆம் இடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி

16 வயதுப் பிரிவு

முதலாம் இடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் - நாவற்குழி ம.வி.

18 வயதுப் பிரிவு

முதலாம் இடம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் -, கொடிகாமம் திரு நாவுக்கரசு ம.வி.

(203-207)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை இராசம்மா

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராசம்மா நேற்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் மனைவியும், துரைசிங்கம், கிருஷ்ணபிள்ளை, ஜீவரத்தினம், கனகம்மா, மகேந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.01.2008) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோமரன் தோட்டம்,
உடுவில்கிழக்கு,
சுன்னாகம். (70363)

தகவல்:
பொ.துரைசிங்கம் (மகன்)

### திருமதி கந்தையா அன்னமுத்து



சந்நிதி றோட், தம்பாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அன்னமுத்து நேற்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மணியம்) மற்றும் புவனேஸ்வரி, இரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் நல்லதம்பி, இராசையா, பாலாமணி ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.01.2008) திங்கட்கிழமை வல்லை றோட் அச்சுவேலியிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

வல்லை றோட், அச்சுவேலி. (70358)

### திருமதி பாலராணி ஜெகதீஸ்வரன்



(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் மகளிர் கல்லூரிவீதி, கற்குழி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலராணி ஜெகதீஸ்வரன் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) 18.01.2008 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மட்டுவில் வடக்கு காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் பொன்னுத்துரை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மு.ஜெகதீஸ்வரனின் (Electrical Foreman) அன்பு மனைவியும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களான காலஞ்சென்ற முத்தையா - சின்னத்தங்கம் தம்பதியியரின் பாசமிகு மருமகளும் அமரர் ஜனார்த்தனன், தனுஷியா (சிங்கப்பூர்), தீபாஷினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் முரளிதரன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), கலைச்செல்வன் (கனடா), திருமதி தேஜா கமலேஸ்வரன் (ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் மாமியும் மயுரேசன் (சிங்கப்பூர்), மயூறிக்கா (சிங்கப்பூர்), பிறிட்டிக்கா (கனடா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சுந்தரராஜன், சுந்தரராணி, அமரர்களான ரவீந்திரன், புஸ்பராணி ஆகியோரின் அருமைச் சகோதரியும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களான காலஞ்சென்ற ரவிச்சந்திரன், ஜெகதாம்பிகை, அமரர் தேவமனோகரி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), கமலாதேவி (தாதிய உத்தியோகத்தர்), ரமணிகரன், அமரர் ஸ்ரீதரன், மங்களாகரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் திருமதி தாமோதரம்பிள்ளை, திருமதி ஜெயராஜசிங்கம் (கனடா) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2008) திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ந.தாமோதரம்பிள்ளை
(ஓய்வுபெற்ற அதிபர் - சம்பந்தி).

'கோகுலம்',
சங்கத்தானை, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்



திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (20.01.2008) அதிகாலை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் - சிவபாக்கியத்தின் பாசமிகு துணைவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் குருகுலசிங்கம், தர்மகுலசிங்கம், மகேஸ்வரி (கனடா), அமரர் தனபாலசிங்கம் (சந்திரன் - (முன்னாள் உரிமையாளர் அம்பாள் ஸ்ரோஸ், திருநெல்வேலி), அமரர் இராசலிங்கம் (ராசா - (முன்னாள் உரிமையாளர் ராஜா ஸ்ரோர்ஸ் - திருநெல்வேலி) சண்முகரட்ணம் (கனடா), சூரியகுமாரி (NISSHA CIVIL Eng. - CONSTRUCTION) ஆகியோரின் அன்புத் தந்தையும் கு.புஸ்பராணி, த.புஸ்பராணி, தயானந்தன், கலாநிதி, நிர்மலேஸ்வரி, பரிபூரணன் ( வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் பிரதீபன், பிரபாலினி, பிருந்தா, பிரதீஸ், சுவர்ணலதா, தர்ஷன், சுஜதாஸ், சுலக்ஷனா, தயாளினி, தயானி, தயானா, துவாரகாஸ், ஜெயகௌதன், பிரசாந், மிதுன்ராஜ், வினோத்ராஜ், அருண்ராஜ், சரன்ராஜ், சோபிகா (யாழ்/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை 2009 A/L வர்த்தகப்பிரிவு), ராஜிவன் (யாழ் இந்துக் கல்லூரி 11ஆம் ஆண்டு), நிஷாந்திகா (கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (21.01.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பொற்பதி வீதி,
(பிள்ளையார் கோவில் பின்வீதி)
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (70357)

தகவல்:
சி.பரிபூரணன்
(மருமகன்).
T.P.021 222 7027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெனாஸிர் படுகொலை வழக்கில் பதினைந்து வயதுச் சிறுவன் கைது

இஸ்லாமாபாத், ஜன. 21

பெனாஸிர் பூட்டோ கொலை வழக்கில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது. அவரைக் கொலை செய்வதற்காக அமைக்கப்பட்ட 5 பேர் கொண்ட தீவிரவாதிகள் குழுவில் இடம் பெற்றிருந்த 15 வயதுச் சிறுவன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பாக். பொலிஸார் அறிவித்திருக்கின்றனர்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ கடந்த மாதம் 27ஆம் திகதி ராவல்பிண்டியில் படுகொலை செய்யப்பட்டார்.

உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் விசாரணைக்கு உதவும்படி ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸாரை பாக். ஜனாதிபதி முஷாரப் கேட்டுக் கொண்டார். இதைத் தொடர்ந்து, ஐந்து பேர் அடங்கிய ஸ்கொட்லாந்து பொலிஸ் குழு பாகிஸ்தானுக்கு 4ஆம் திகதி வந்து விசாரணைகளை நடத்திவருகிறது.

இந்த நிலையில் பெனாஸிரின் கொலை வழக்கில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது. பெனாஸிரைக் கொலைசெய்ய 5 பேர் கொண்ட குழுவை தீவிரவாதிகள் அமைத்திருந்தார்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.



மேலும், அந்தக் குழுவைச் சேர்ந்த 15 வயது ஐதேஜஸ் ஷா என்ற சிறுவனை, பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் உள்ள தேரா இஸ்மாயில்கான் என்ற இடத்தில் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர். விசாரணையில் ஐதேஜஸ் ஷா கூறியிருப்பவை வருமாறு:-

''பெனாஸிரைக் கொல்ல ஐந்து பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் நானும் ஒருவன். பெனாஸிரைக் கொல்ல ஒரு மனித வெடிகுண்டும், ஒரு தீவிரவாதியும் ராவல்பிண்டிக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் நடத்தும் தாக்குதலில் பெனாஸிர் தப்பி விட்டால், அவர் மீது மீண்டும் தாக்குதல் நடத்த நான் உட்பட மற்றைய மூன்று பேர் தயாராக இருந்தோம். பெனாஸிரைத் தீவிரவாதிகளான பிலால், இக்ரமுல்லா ஆகிய தீவிரவாதிகள்தான் தாக்குதல் நடத்திக் கொன்றனர்.

''எனது சொந்த ஊர் கராச்சி. நான் பைதுல்லா மெக்சூத் தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்தேன். வசிரிஸ்தான் பகுதிக்கு என்னைக் கடந்த ஆண்டு அழைத்துச் சென்றனர். அங்கு எனக்குத் தீவிரவாத பயிற்சியளிக்கப்பட்டது. முகரம் மாதமான இந்த மாதத்தில் அஷுரா நிகழ்ச்சியின்போது குண்டுகளை வெடித்துத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தோம். அதற்குள் பொலிஸில் பிடிபட்டு விட்டேன்.'' - இவ்வாறு ஷா கூறியுள்ளார்.

இந்தத் தகவலைப் பாகிஸ்தானில் உள்ள ஒரு செய்தி நிறுவனத்துக்கு ஒரு பொலிஸ் அதிகாரி நேற்றுமுன்தினம் தெரிவித்தார். அவர் தனது பெயரைக்கூற மறுத்துவிட்டார். பெனாஸிர் கொலை வழக்கில் சிறுவன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளமை பற்றி உள்விவகார அமைச்சக செய்தித் தொடர்பாளர் இக்பால் ஷீமாவிடம் கேட்டதற்கு, 'அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது.'' - என்று கூறினார்.

## ஈராக்கில் இரு பிரிவினர் மோதல்; ஐம்பதிற்கும் மேற்பட்டோர் பலி

பாக்தாத், ஜன.21

ஈராக்கில் இரு பிரிவினரிடையே நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் தெற்குப் பகுதியில் உள்ள இரு நகரங்களில் முஸ்லிம் சமூகத்தின் இரு பிரிவினரே மோதலில் ஈடுபட்டனர். கடந்த ஆண்டும் இதேபோன்ற மோதல் இங்கு நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

முகரம் பண்டிகையை முன்னிட்டு பிரார்த்தனை செய்தபடி ஷியா பிரிவு முஸ்லிம்கள் ஊர்வலமாகச் சென்றனர். இவர்கள் மீது மற்றொரு பிரிவினர் தாக்குதல் நடத்தினர். இதில் ஈராக்கின் பாஸ்ரா நகரில் நடைபெற்ற மோதலில் 36 பேர் உயிரிழந்தனர் எனத் தெரிய வந்துள்ளது. மற்றொரு நகரான நாஸிரியாவில் 10 பேர் உயிரிழந்தனர் என அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். இப்பகுதியில் வெள்ளிக்கிழமை இரவிலும் வன்முறைச் சம்பவங்கள் நடந்தமையால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனத் தெரிகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் அண்மையில் ஈராக்கில் ஊடுருவிய அல்-குவைதா தீவிரவாத இயக்கத்தினரும் இருந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அவர்கள்தான் சமீபகாலமாக தங்களை வெறுக்கும் சுனி பிரிவு முஸ்லிம்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் தொடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பாக். தலைவர்களைக் கொல்ல 11 குண்டுதாரிகள் ஊடுருவல்!

இஸ்லாமாபாத், ஜன. 21

பாகிஸ்தான் தலைவர்களைக் கொல்வதற்காக இஸ்லாமாபாத்தில் 11 மனித குண்டுதாரிகள் ஊடுருவியிருக்கின்றனர் எனப் புலனாய்வுத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீவிரவாதிகளின் கொலைப்பட்டியலில் பாகிஸ்தான் முன்னாள் அமைச்சர் ஷேக் ரஷீத் அஹமது, முன்னாள் அதிபர் ஜியா உல்ஹக்கின் மகன் இஜாஉல்ஹக் மற்றும் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களைக் கொலைசெய்யும் நோக்கத்துடன் இஸ்லாமாபாத் மற்றும் ராவல்பிண்டி ஆகிய நகரங்களுக்குள் தற்கொலைப் படையைச் சேர்ந்த 11 மனித வெடிகுண்டுகள் ஊடுருவியிருக்கின்றனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. முகரம் மாதம் முடிவதற்குள் தாக்குதல் நடத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனர் என்றும் புலனாய்வு வட்டாரங்களுக்குத் தெரியவந்திருக்கிறது.

இதைத் தொடர்ந்து அந்த இரு நகரங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விரைவான விடுதலையை வலியுறுத்தி மலேஷிய இந்தியர்கள் உண்ணாவிரதம்

கோலாலம்பூர், ஜன.21

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மலேஷியச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 5 இந்திய வம்சாவளித் தலைவர்களும் நேற்று முதல் சிறைக்குள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

வாரத்துக்கு 5 நாட்கள் தண்ணீர் மட்டுமே குடிக்க அவர்கள் முடிவு செய்துள்ளனர் என அவர்களது வழக்கறிஞர் என். சுரேந்தரன் கூறியுள்ளார்.

மலேஷியாவில் இந்திய வம்சாவளியினருக்கு சம உரிமை வழங்கக்கோரி கடந்த நவம்பரில் தலைநகர் அடக்குமுறையை ஏவிவிட்டனர் என்ற குற்றச்சாட்டில் 31 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் இந்து உரிமை நடவடிக்கைக் குழுவை (ஹிண்ட்ராப்) சேர்ந்த 5 பேர் மட்டுமே தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். மற்றையவர்கள் விடுவிக்கப்பட்டனர். தேசிய பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டால் விசாரணை கிடையாது; வழக்காட முடியாது; பிணையிலும் வெளிவர முடியாது.

விசாரணையின்றி தங்களைச் சிறையில் அடைத்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் 5 பேரும் உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்துள்ளனர். ''அரசியல் உள்நோக்கத்தோடு அரசு எங்களைச் சிறையில் அடைத்துள்ளது. எனவே, எங்களை விடுவிக்க வேண்டும் என்று கோரி போராட்டத்தைத் தொடங்கியிருக்கின்றோம்.'' - என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சட்டவிரோதமாகக் குடியேற முற்பட்ட 50 பேர் படகு கவிழ்ந்ததில் உயிரிழப்பு

### ஏதேன் வளைகுடாவில் விபரீதம்

ஏதேன், ஜன.21

ஏமனில் சட்ட விரோதமாகக் குடியேற முற்பட்ட ஆபிரிக்கரின் படகொன்று நேற்று முன்தினம் ஏதேன் வளைகுடாவில் புயலில் சிக்கி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் 50 சடலங்கள் ஏமன் கரையை அடைந்துள்ளன என அங்கிருந்து வெளியான ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படகில் குறைந்த பட்சம் 135 பேர்வரை பயணித்தனர். அவர்களில் சோமாலியர்களும், எதியோப்பியர்களும் அடங்குவர். உறுதியற்ற அப்படகில் அளவுக்கு அதிகமானோர் நெருக்கியடித்துக் கொண்டு பயணித்தனர். விபத்தில் மேலும் பலர் பலியாகியிருக்கலாம் என தப்பிப்பிழைத்த 35 பேர் ஏமன் அதிகாரிகளிடம் தெரிவித்திருக்கின்றனர்.

ஏமனின் அபியன் மாகாண கடற்கரைப் பகுதியில் மேலும் சடலங்களை மீட்பதற்கான தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என ஓரதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வோர் ஆண்டும் ஏமனை அடைய முற்படும் நூற்றுக்கணக்கான ஆபிரிக்கர்கள் பலியாகி வருகிறார்கள். விபத்துகளில் சிக்கி மூழ்கி இவர்கள் மரணிக்கிறார்கள். கடற்கொள்ளையர்களாலும், கடத்தல்காரர்களாலும் மற்றும் பலர் கொலை செய்யப்படுகின்றனர். சோமாலியாவையும் அரேபியத் தீபகற்பத்தையும் பிரிக்கும் அபாயகரமான கடற்பிராந்தியத்தில் இந்த அனர்த்தங்கள் விளைகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## உலக அரங்கில்

## அங்கோலாவில் விமான விபத்து 25 பேர் வரை பலியென அச்சம்

அண்டா, ஜன. 21

அங்கோலாவின் இரண்டாவது மாநகரமான ஹுயாம்போவிற்கு அருகிலுள்ள மலைப் பிராந்தியத்தில் நேற்றுமுன்தினம் விமானமொன்று மோதி விபத்துக்குள்ளானதில் 25 பேர் உயிரிழந்தனர்.

''விமான விபத்தை எம்மால் ஊர்ஜிதப்படுத்த முடியும். அதேவேளை, 25 சடலங்களை நாம் இதுவரை கணக்கிட்டுள்ளோம் என ஹுயாம்போ மாகாண அரச அதிகாரி சம்பவம் நடந்த இடத்திலிருந்து தொலைபேசி மூலமாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்திருக்கிறார்.

எமது மதிப்பீட்டின்படி இக் கோர விபத்தில் எவரும் உயிர்பிழைத்திருப்பர் எனக் கூற இயலாது. இதற்கான சாத்தியக்கூறு கிடையாது. எனினும் தேடுதல், மீட்புப் பணிகள் தொடர்கின்றன'' - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விமான விபத்தில் பலியானோரில் இவ்விமானத்தின் சொந்தக்காரரான வெலண்டைன் எனோயிஸும் ஒருவர். அங்கோலா ஆளும் கட்சியில் இவர் ஒரு சிரேஷ்ட உறுப்பினருமாவார் என அவரது குடும்ப அங்கத்தவர்கள் வெளியிட்டுள்ள தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது.

''இந்த விமானத்தில் எங்கள் மாமனார் வெலண்டைன் எனோயிஸும் கடமையின் நிமித்தம் ஹுயாம்போவை நோக்கிப் பயணித்துள்ளார். விமானம் விபத்துக்குள்ளாகி விட்டது. இதில் பயணித்த எங்கள் மாமாவும் மற்றையவர்களும் மரணித்து விட்டார்கள் என்ற செய்தி இப்போது எமக்கு எட்டியுள்ளது'' - என அவரது மருமகன் தொலைபேசி மூலமாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்கு அறிவித்திருக்கிறார்.

''எங்கள் குடும்பம் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்துவிட்டது. நாங்கள் எம் மாமனாரையும் அவரது புதல்வரான எம் மைத்[illegible]டோம்.'' - என்றும் அவர் [illegible]ள்ளார்.

கிங் எயார் பி.200 என்னும் விமானமே விபத்துக்குள்ளாகியுள்ளது. இது கிராகுளோபோ எனும் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமானது. வெலண்டைன் எனோயிஸே இந்நிறுவன உரிமையாளராவார். இவ்விமானம் அங்கோலாவில் வாடகைச் சேவையில் ஈடுபட்டு வந்தது என மேற்படி நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## கென்யாவில் நாளுக்குநாள் அதிகரிக்கும் வன்முறைகள்

நைரோபி, ஜன.21

கென்யாவில் தொடரும் வன்முறைகளில் மேலும் ஐவர் கொல்லப்பட்டுள்ள அதேவேளை, ஆர்ப்பாட்டப் பேரணிகள் தொடர்ந்தும் நடைபெறவுள்ளன.

அகதி முகாமொன்றை இளைஞர் குழுவொன்று தாக்கியபோதே 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 200 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சிக்கு பொதுவாக ஆதரவாகவுள்ள கலென்ஜின்ஸ் இனக்குழுவினர் ஜனாதிபதி கிபாகிக்கு ஆதரவுள்ள கிக்கியு பழங்குடி இனத்தவர்களைத் தாக்கியுள்ளனர். கென்யாவில் தொடர்ந்து இடம்பெறும் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து முகாமில் தங்கியிருந்தவர்களே கொல்லப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கிபாகிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை எதிர்வரும் வியாழக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கிபாகி அரசை முடிவிற்குக் கொண்டு வருவதற்காக சகல சாத்தியமான வழிமுறைகளையும் பயன்படுத்தப் போவதாக எதிர்க்கட்சியான ஓரேஞ் ஜனநாயக இயக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பேச்சுகளை மேற்கொள்வதற்காக கென்யாவிற்குச் சென்றுள்ள ஐரோப்பிய அபிவிருத்தி ஆணையாளர் இவ்வாறான பேரணிகள் மேலும் வன்முறைக்கு வழிவகுக்கலாம் என எச்சரித்துள்ளதுடன் மோதல் தவிர்ப்பே உடனடியாக அவசியமென்றும் தெரிவித்துள்ளார்.

## புகைப்பிடிப்பதை சிறுவர்களிடம் தூண்டுவது சினிமாதான்!

### ஆய்வில் தகவல்

வாஷிங்டன், ஜன.21

சிறுவர்களுக்குப் புகைப்பிடிக்கும் பழக்கம் ஏற்பட, சினிமா முக்கிய தூண்டுகோலாக இருப்பதாக அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள தர்மவுத் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த நிபுணர்கள், சிறுவர்களிடையே புகைப்பிடிக்கும் பழக்கம் எப்படி ஏற்படுகிறது என்பதை அறிய ஆய்வு மேற்கொண்டனர். நியூ ஹம்ஷையர், வெர்மோண்ட் நகரங்களில் உள்ள 26 பாடசாலைகளைச் சேர்ந்த 2,200 மாணவர்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்களிடம் 3 கட்டமாக ஆய்வு செய்யப்பட்டது.

முதல் கட்டமாக, இவர்களிடம் கடந்த ஐந்தரை ஆண்டுகளில் வெளியான புகழ்பெற்ற 50 திரைப்படங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டது. இந்த சினிமாக்களில் கதாநாயகர்கள் புகைப்பிடிக்கும் காட்சிகள் அதிகம். அதன்பின், ஓராண்டுக்குப் பிறகு ஒருமுறையும், 2 ஆண்டுகள் கழித்து மீண்டுமொரு முறையும் அவர்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த சிறுவர்களில் 10 சதவீதம் பேர் புகைபிடிக்கத் தொடங்கி இருந்தனர். இவர்களில் 87 சதவீதம் பேர், சினிமா பார்த்துப் புகைப்பிடிக்கத் தொடங்கியிருந்தனர் எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக லிண்டா என்ற நிபுணர் கூறுகையில், ''சிறுவர்களிடம் புகைப்பிடிக்கும் பழக்கத்தை சினிமா தூண்டுகிறது. புகைப்பிடிக்கும் காட்சிகள் [illegible] பார்க்க அனுமதிக்கக் கூடாது. இது குறித்து அவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசுவாமி கோயில்
## தைப்பூசம் - மஞ்சத்திருவிழா

காலம் : நாளை 22.01.2008 (தை மாதம் 8ஆம் நாள்) செவ்வாய்க்கிழமை
முற்பகல் : 10மணி - 1008 சங்காபிசேகம்
நண்பகல் : 12 மணி - விசேட பூசை
பிற்பகல் : 3 மணி - வசந்தமண்டபப் பூசை
பிற்பகல் : 3.30 மணி - சண்முகர் அர்ச்சனை
பிற்பகல் : 4 மணி - மஞ்சத்திருவிழா

அடியார்கள் அனைவரும் சமூகந்தந்து சண்முகப்பெருமானை வணங்கி இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
தைப்பூசமஞ்சத் திருவிழா
உபயகாரர்கள்
(70257)

# சேவைநலன் பாராட்டு



22.01.2008இல் ஓய்வு பெறும் எமது ஆசிரியை
திருமதி
திருமகள்
பொன்னம்பலம்

சேவைவிபரம்

| | |
|---|---|
| மட்/பட்டிருப்பு ம.வித். | 23.05.77 - 14.02.78 |
| மட்/களுதாவளை ம.வித். | 15.02.78 - 09.05.79 |
| யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலை | 10.05.79 - 31.02.82 |
| யா/அராலி சரஸ்வதி ம.வித். | 01.02.82 - 31.07.89 |
| யா/அராலி இந்துக்கல்லூரி | 01.08.89 - 03.05.95 |
| யா/அராலி கிழக்கு அ.மி.த.க. (ஆசிரியர், பதில் அதிபர்) | 04.05.95 - 09.04.02 |
| யா/உயரப்புலம் குணபாலன் வித்தி. | 10.04.02 - 21.01.08 |

கள்ளமில்லா அன்புடனே கலந்து உறவாடி
கானமிசை பொழிந்து மனம் மெய் மணக்கச் செய்தீர்!
பண்போடும் பரிவோடும் பழகும் திருமகளே!
பல்லாண்டு பல்லாண்டு நீடூழி வாழி! வாழி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம், ஆனைக்கோட்டை.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

952 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

26 40 46 49

மிதுனம்

18-01-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5447426 - 5462566

ஜக்பொட் பரிசு ரூபா. 3,196,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 334,791 | 10/- | 3,347,910/- |
| 2 இலக்கங்கள் | 30,709 | 20/- | 614,180/- |
| 1 இல. + லக்கினம் | 30,265 | 30/- | 907,950/- |
| 2 இல. + லக்கினம் | 2,817 | 100/- | 281,700/- |
| 3 இலக்கங்கள் | 805 | 500/- | 402,500/- |
| 3 இல. + லக்கினம் | 85 | 5,000/- | 425,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,196,200/- | - |
| மொத்தம் | | | 6,379,240/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 399,481 | | 7,402,740/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,943,550/-

தொடர் இலக்கம் 45770654 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஜனவரி 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5456081-6-50 |
| கம்பஹா | 5460017-7-26 |
| கண்டி | 5457406-8-74 |
| அம்பாறை | 5451239-5-52 |
| திருகோணமலை | 5455672-2-38 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
37, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02


## சமய சந்நிதிகளில்

அச்சுவேலி,ஜன.21

அச்சுவேலி, காட்டுமலைக் கந்தசாமி கோயில் ராஜகோபுர அடிக்கல் நாட்டும் விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

ராஜகோபுரத்தை நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தத்தினை தமிழ்நாடு சிதம்பரத்தை சேர்ந்த கலியுகப் பெருமான் புருசோத்மன் குழுவினர் பொறுப்பேற்றுள்ளனர்.

பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் காட்டுமலைக் கந்தன் ராஜகோபுர திருப்பணிக்கு உதவ விரும்புபவர்கள் அச்சுவேலி இலங்கை வங்கிக் கணக்கு ஊடாக உதவலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(203-11)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.21

சாவகச்சேரி, சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட பஞ்சமுக விநாயகர் பிரதிஸ்டா கும்பாபிசேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறும்.

பிரதிஸ்டாகிரியைகள் 'கலாநிதி' 'பண்டிதர்' சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

(203-207)

# கால்கோள்விழாக்கள்

சுழிபுரம்,ஜன.21

சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை ஆரம்ப மாணவர்களின் கால்கோள் விழா கடந்த 18ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய உப அதிபர் தலைமையில் நடைபெற்றது.

சிவத்திரு சி.பிறைசூடிக் குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் வலயத்தின் ஆங்கில ஆசிரிய ஆலோசகர் எ.வி.மகாதேவனின் உரை இடம்பெற்றது.

(202-28)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 1 வகுப்புகளில் இணையவுள்ள மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த 17ஆம் திகதி இடம்பெற்றது.

புதிய மாணவர்கள் சிரேஷ்ட மாணவர்களால் மலர் தூவியும் மலர்மாலை அணிவித்தும் வரவேற்கப்பட்டனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும், பெற்றோர், ஆசிரியர் சங்கத்தினரும் புதிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

பாடசாலைகளின் மாணவர்களின் வரவேற்புக் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(203-207)


## உடன் தேவை

தாதியர் பயிற்சியில் அனுபவம் உள்ளவர்களும்/ பயிற்சி பெற விரும்புபவர்களும், பார்மஸி அனுபவம் உடையவர்களும் / பயிற்சி பெற விரும்புபவர்களும் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்,
இல.8, ராமையார் செட்டியார் லேன், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 7259
(70247)


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் நல்லையா



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், மெமோறியல் ஒழுங்கை மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நல்லையா நேற்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் தங்கம்மா தம்பதியினரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்பு கணவரும் சிறிகணேஸ், சிறிதேவி, சிறிறங்கன், சிறிகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவீந்திரன், சுவர்ணா, யசிகலா ஆகியோரின் மாமனும் தக்சுமி, சயிரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ.ரவீந்திரன்
(மருமகன்)
மெமோறியல் ஒழுங்கை,
மானிப்பாய்.
(70298)

## கசிப்பு வைத்திருந்த நபருக்கு விளக்கமறியல்

சட்டவிரோத கசிப்பு வைத்திருந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் காளிகோவில் வீதியில் ஒரு லீற்றர் கசிப்பு வைத்திருந்த நபருக்கு எதிராக மதுவரி திணைக்களத்தினர் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்த வழக்கினை விசாரித்த நீதிவான் இந் நபரை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (203-207)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
21
★
04
★
1928



ஆண்டவன் அடியில்
23
★
12
★
2007

## திருமதி கணபதி இலட்சுமி

அன்பின் அம்மாவே! எங்கள் குலவிளக்கே!
சித்திரத்து சிறு முகத்தாய் கைப்புறத்தில் எமை ஏந்தி
காலம் எல்லாம் காத்த கடனை - எனி
எப்பிறப்பிலம்மா தீர்ப்போம்
இதோ நெத்தறுந்த நெல்லானோம்

இன்று (21.01.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிராத்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வரணி வடக்கு,
வரணி.
தகவல்:
பிறைசூடி (மகன்)

உங்கள்ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மகன்மார்,மகள், மருமகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரன், சகோதரிமார், உறவினர்கள்
(70287)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் மனம் மகிழ வந்தது
18
★
06
★
1924



விண்ணில் மனம்நெகிழ மறைந்தது
22
★
12
★
2007

## திருமதி சின்னத்துரை பொன்னம்மா

திதி: சதுர்த்தசி (21.01.2008)


அன்புள்ளங் கொண்ட எங்கள் அம்மாவே!
அருமையாய்எமை வளர்த்த அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வு நாம் வாழ உன்னையே அர்ப்பணித்தாய்
இப்போது எமைப்பிரிந்து ஏன் போனாய் தாயே?
எமைப்பிரிந்து நீ எங்குதான் சென்றிட்டாலும்
உன்னுருவம் மட்டும் எம்முள்ளத்தில் மறையாது
ஆருயிர்த் தாயே உன் ஆத்மா சாந்தியடைய
காமாட்சியம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

மதவடி ஒழுங்கை,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(70289)

பிரிவால் துயருறும்:
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மூன்றாமாண்டு நினைவில்...

பிறப்பு
22
★
11
★
1974



இறப்பு
25
★
01
★
2005

## அமரர் செல்லையா ரஜனிகாந்

(சுரேன்/சங்கமன்)

திதி:21.01.2008 சதுர்த்தசி

சிட்டெனப் பறந்து திரிந்த இரத்தினப்பறவை
சிறகொடிந்து விழ்ந்து மூன்றாண்டானதுவோ?
நாட்டு நடப்பும் விட்டு நடப்பும்
நகைச்சுவையுடன் நாம் பேசி
மகிழ்ந்திருந்த காலம் இனி வருமோ ....?

4/2, அம்பாள் வீதி,
நாயன்மார்க்கட்டு,
யாழ்ப்பாணம்.
(70272)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி கட்டடம் புனரமைப்பு

வலிதென்மேற்கு, ஜன.21

சில்லாலை சாந்தை விநாயகர் சனசமூக நிலைய முன்பள்ளிக் கட்டடம் 'கமநெகும' திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை, சாந்தைக் கிராமத்தில் 'கமநெகும' திட்டத்தின் கீழ் 9 மலசல கூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள ஒன்பது குடும்பங்களுக்கு இந்த மலசல கூடங்கள் நிறுவிக் கொடுக்கப்படவுள்ளதாகவும் இதற்கான கட்டட வேலைகள் நடைபெற்று வருவதாகவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.(203-135)

## சுயதொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் செப்ரெம்பர் வரை 3 ஆயிரத்து 55 பேர் இணைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.21

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழிலாளர்களுக்கான ஒய்வூதியத் திட்டத்தில் குடாநாட்டில் கடந்த செப்ரெம்பர் வரை 3 ஆயிரத்து 55 பயனாளிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

சபை வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்கள் ஊடாக மருதங்கேணியில் 24 பயனாளிகளும், சாவகச்சேரியில் 76 பயனாளிகளும், பருத்தித்துறையில் 132 பயனாளிகளும், நல்லூரில் 356 பயனாளிகளும், கோப்பாயில் 78 பயனாளிகளும், உடுவிலில் 60 பயனாளிகளும் -

கரவெட்டியில் 195 பயனாளிகளும், தெல்லிப்பழையில் 118 பயனாளிகளும், சண்டிலிப்பாயில் 94 பயனாளிகளும், நெடுந்தீவில் 5 பயனாளிகளும், வேலணையில் 67 பயனாளிகளும் -

சங்கானையில் 76 பயனாளிகளும், ஊர்காவற்றுறையில் 148 பயனாளிகளும், யாழ்ப்பாணத்தில் 70 பயனாளிகளும், காரைநகரில் 4 பயனாளிகளும் இணைக்கப்பட்டுள்ளனர்.

நேரடியாக ஆயிரத்து 543 பேர் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.


(202)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜன.21

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு -

* சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் வி.க. எதிர் அராலி துணவி சென்ஸ்ரார் வி.க.
* அராலி தெற்கு மாவத்தை வி.க. எதிர் யாழ்ப்பாணம் குருநகர் பாடும்மீன் வி.க. பி அணி.
* அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் எதிர் தெல்லிப்பழை யுத்யூனியன் விளையாட்டுக்கழக ஏ அணி. (202-86)



உடுப்பிட்டி மகளிர் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவு அண்மையில் மனை முகாமைத்துவத் தொழிற்திறன் கண்காட்சி ஒன்றை நடத்திய போது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்விப் ணிப்பாளர் வ.செல்வராசா மங்கள விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:சுந்தா)*

## குறுகிய கால விளைச்சல் தரும் விதை நெல் உற்பத்தி

வலிதென்மேற்கு, ஜன.21

நிக்கொட் திட்டத்தின் கீழ் குறுகிய கால விளைச்சலைத் தரும் நல்லின விதை நெல்லை உற்பத்தி செய்வதற்காக மல்லாகம் தெற்குப் பகுதியில் நான்கு விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கு விதை நெல் வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டிருப்பதாக கீரி மலை கமநல சேவை நிலையப் பிரிவு விவசாயப் போதனாசிரியர் திருமதி ப.மணிவர்மன் தெரிவித்தார். தற்போது இந்த நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ளதாகவும் எதிர்வரும் 2008/2009 காலபோக நெற்செய்கைக்கு இதன் மூலம் பெறப்படும் விதை நெல் இப்பிரதேச விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-135)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன.21

நாவற்குழி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் புதிர் விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.


மன்ற முன்னாள் உப தலைவர் கோ.ஜீவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(203)

* * *

யாழ்ப்பாணம், ஜன.21

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமித் தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்




றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆசியுரையுடன் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.21

'ஆளுமை விருத்திக்குத் தியானத்தின் பங்கு' என்னும் தலைப்பிலான பயிற்சி நிகழ்வு ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணி வரை கந்தர்மடம் குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்தமடத்தில் இடம் பெறவுள்ளது.

நிலையச் செயலாளர் சி.சோதிமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை உளவளத்துணையாளர் நா.நவராஜ் பயிற்சிகளை வழங்கவுள்ளார். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.21

குருதேவர் இராமகிருஷ்ண பரமஹம்சரின் நேரடிச் சீடர்களின் ஒருவரான சுவாமி துரியானந்தரின் ஜெயந்தி விழா இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு தாவடியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண சமிதியில் இடம்பெறவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.21

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தின நிகழ்வுகள் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.15 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அதிபர் சு.ஜெயவீரசிங்கம் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைப்பார். தொடர்ந்து சுவாமி சித்ரூபானந்தாவின் உரையும் இடம்பெறும்.

* * *

வலி.தென் மேற்கு,ஜன.21

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் புனரமைப்புச் செய்யப்பட்ட நூலகத் திறப்பு விழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு அதிபர் வண.பிதா ஜேம்ஸ் சிங்கராஜர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேசன் பிரதம விருந்தினராகவும் வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.ரவிச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

இந்த நூலகப் புனரமைப்புக்கென யுனிசெவ் நிறுவனமும் ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையும் நிதியுதவி செய்திருந்தன. (203-135)

## அரச பாடசாலை அதிபர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.21

கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் அரசாங்கப் பாடசாலை அதிபர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை இம்மாதம் தொடக்கம் அதிகரிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான அங்கீகாரம் அமைச்சரவையில் ஏற்கனவே பெறப்பட்டுள்ளதாக கல்வியமைச்சுத் தெரிவித்துள்ளது. அரசாங்கப் பாடசாலை அதிபர்கள் தமது முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டத்தின் பிரகாரம் ஒன்று ஏ.பி.(1AB) தர பாடசாலை அதிபர்களுக்கு மாதாந்தம் 750 ரூபாவும், ஒன்று சி(1C) தர பாடசாலை அதிபர்களுக்கு 600 ரூபாவும் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

இதேவளை, தரம் 2 வகையைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கு 450 ரூபாவும் தரம் - 3 வகையைச் சேர்ந்த பாடசாலையில் கடமையாற்றும் அதிபர்களுக்கு 300 ரூபாவும் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை கல்வி அமைச்சினால் சகல மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (203)

## குடாநாட்டுப் பாடசாலைகள் சிலவற்றின் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.21

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகளை பாடசாலைகளின் அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளனர். அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட முடிவுகள் வருமாறு-

**உடுப்பிட்டி அமெரிக்க மிஷக் கல்லூரி**

**கணிதம்** - ஆர்.சயந்தன் - 3ஏ, எஸ். பிரசாந் - 3ஏ, எம்.பிரசாந் - 2ஏபி, ஜி.சுகிர்தா - 3ஏ, ஜே.ஜீவிதன் 2பிசி, ஆர்.ராகவன் - 2சி,எஸ், ரி.சரண்யா - சி2எஸ்,

**விஞ்ஞானம்** - ஐ.சங்கீதா - 2ஏபி, எஸ். பிறிஞ்சா - 2ஏ,எஸ், எவ்.மயூரன் 2சிஎஸ்,

**கலை** - எஸ்.சிவகௌரி - 2ஏபி, எஸ். சுதர்சன் - 2ஏபி,ரி.செல்வமலை 3ஏ, எஸ். ஜெயந்தன் - ஏ2பி, ஈ.கௌரீசன் - ஏ2பி, எஸ்.கஜிதரன் - 2பிசி, ஜி.கோபிநாத் - ஏபிசி, ரி.இளவரசன் - 2பிசி, ரி.பிரபு- 2பிசி, கே.ஜெனா - 2பிசி, எம்.உசாந்தி - ஏபிசி, பி. விஜயகௌரி - 2ஏசி, பி.ஜெனா - ஏபிசி, எம்.ரஜிதா - ஏபிசி, எஸ்.சிவகௌரி - ஏபிசி, எஸ்.ராகுலன் - ஏபிசி.

**வர்த்தகம்** - எஸ்.கரிகரன் - ஏ2பி, எஸ். ரவிக்குமார் - 2ஏசி, ரி.சரண்ராஜ் - ஏபிசி, எஸ்.சிறிஸ்குமார் - ஏபிசி, எஸ்.சுருதிலயன் - 3சி, என்.கார்த்திக் - ஏபிசி, ரி.பிரதீப் 2சிஎஸ்,

**காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.**

**கணிதம்** - [illegible] - 2ஏபி, தி. புவிதா - 2பிசி, [illegible] நாத் - 3சி.

**வர்த்தகம்** - சு.அகிலன் - 2ஏபி, சி.உமாகாந்தன் - ஏபிசி, கா.ஐங்கரன் 3பி, து.ரவிசாந்தி - 2பிசி, சோ.கௌரி - 2பிசி,

**கலை** - ச.வசந்தகுமாரி - 2ஏசி, க.கஜந்தினி - ஏபிசி, வே.மலர்வேணி - ஏபிஎஸ், ந.ஜனனி - ஏபிஎஸ், உ.தாரணி - ஏபிஎஸ்.

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

**உயிரியல்** - வி.கஜேந்தினி - ஏ2பி, எஸ்.கஜேந்தினி - ஏபிசி, எஸ்.நிரோஜி - 2பிசி.

**கணிதம்** - ரி.தாரணி - பி2சி, ரி.கஜந்தா - 3சி, எஸ்.தேவகா பி2சி.

**வர்த்தகம்** - ரி.அஸ்வினி - 2ஏபி, எஸ். பிரதீபா - 2பிசி, ரி.உதயராணி - 2பிசி

**கலை** - எஸ்.வர்ணஸ்ரீ - 3ஏ, கே. நிஷானி 3ஏ, எஸ்.செல்வரஜிதா -2ஏபி, என்.அபிராமி - 2ஏபி, ரி.விமல்சினி 2ஏசி, பி.அஜந்தினி - 2ஏபி, எம்.நிலோஜனா - ஏ2பி, எஸ். பிரியதர்சினி - ஏ2பி, பி.சௌமியா - ஏ2பி, எஸ்.சிவாஜினி 2ஏபி, கே.தர்சினி - 2ஏபி, பி.கல்ப்பனா ஏ2சி, எஸ்.துர்க்கா 2ஏசி, எஸ். கேதீஸ்வரி 2ஏசி, ரி.வானதி - ஏபிசி, எஸ். சிவனந்தினி - 2ஏபி, சுஜிதா - 2ஏசி, கே. மயூரி -ஏபிசி, வை.டயானா - ஏபிசி, ஜி. தாரணி ஏபிசி, எம்.சசிகலா ஏ2சி, கே.சுகிதா -ஏபிசி, என்.உமா - ஏபிசி, எஸ். தர்சிகா - ஏ2பி, எஸ்.ரூபினி - ஏ2பி, ஜி. றொக்சியா - ஏபிசி, எஸ்.பவானி - 3பி, ஜி. சசிகா - 2பிசி, ஆர்.கலைவாணி - 2பிசி, என்.பிருந்தா - 2பிசி, ரி.மைதிலி - 2பிசி, எஸ்.மீரா - 2பிசி, எஸ்.பாமதி - 2பிசி, கே.துஸ்யந்தினி - 2பிசி, [illegible] - 2பிசி, எஸ். ராதிகா - [illegible], [illegible]யாமளா - 2பிசி.

(202-218)

## இலவச கணனிப் பயிற்சி நெறி

வலிதென்மேற்கு, ஜன.21

வட்டுக் கோட்டை லயன்ஸ் கழகத்தின் சித்தங்கேணியிலுள்ள வட்டு - தொண்டையம் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடத்தி வரும் இலவச கணனிப்பயிற்சி நெறியில் 4ஆம் கட்டப் பயிற்சி நெறி கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் அனுமதிக்கப்பட்டு இலவசமாகப் பயிற்சி பெற்று வருவதாக லயன்ஸ் கணனி பயிற்சிக்கான மாவட்ட தலைவர் லயன் ச.கனகராசன் தெரிவித்தார். (203-135)

## வேருண்டல் மயானம் கழிவுகளால் அசுத்தமடைகின்றது

உடுப்பிட்டி, ஜன.21

நெல்லியடி கிழக்கு, வேருண்டல் மயானம் பொதுமக்கள் மற்றும் கால்நடைகளால் அசுத்தப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மயானத்தினுள் மலசலம், கால்நடைகளின் கழிவு, எச்சங்கள் சிகை யலங்கரிப்பு நிலையக் கழிவுகள் போன்றவை கொட்டி அசுத்தப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அப்பகுதியில் கொல்களம் உள்ளது. கழிவுகள் உடன் அகற்றப்படாததாலேயே கால்நடைகளின் எச்சங்கள் நாய்களால் இழுத்துச்செல்லப்பட்டு அசுத்தப்படுத்தப்படுகின்றன. அத்துடன் இவை அருகிலுள்ள ஞானாசாரியார் ஆலயம் அதற்குரிய கிணறு போன்றவற்றினுள்ளும் போடப்படுவதால் மக்கள் பெரும் மனக்கிலேசமடைகின்றனர். இதுவிடயமாக பிரதேசபைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பல தடவைகள் தெரிவித்தும் கவனமெடுக்கவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (202-155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மகுதலிங்கம் விஜிதா
யா/யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி
க.பொ.த.உ/த பரீட்சையில்
கலைப்பிரிவில்-3A



புஸ்பராசா கஜனி
யா/வட்டு. இந்து கல்லூரி மாணவி
க.பொ.த.உ/த பரீட்சையில்
கலைப்பிரிவில்-A,B,S

சித்திகளைப் பெற்ற
மையையிட்டு
இவர்கள் இருவரையும்
பாராட்டி
வாழ்த்துவதுடன்
இவர்களிற்கு
உறுதுணையாக
இருந்த ஆசிரியர்கள்,
பெற்றோர்கள் மற்றும்
அனைவருக்கும்
நன்றிகளைத்
தெரிவித்துக்
கொள்கின்றோம்.

துணவி, சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (70243)

வாழ்த்துவோர்:
ரென்.ஸ்ரார் விளை.கழகம்.




After O/L
Face the Future with confidence

**Diploma Courses @ IIS**

*Courses*

1.Diploma in Microsoft Office
2.Diploma in Desk Top Publishing
3.Diploma in Internet Technology
4.Diploma in Hardware Technology
5.Diploma in Computer Programming
6.Diploma in Eng.Drawing & AutoCAD
7.Diploma in Computerized Accounting
8.Certificate in Java Programming
9.Certificate in Visual C Programming
10.Certificate in Visual Basic Programming

New Batches Start on :-
Batch 3:-23/01/2008 Batch 4:-26/01/2008

IIS உங்கள் ஒளிமயமான எதிர் காலத்தின் வழிகாட்டி.

**Institute of Informatics Studies**
#100,Clock Tower Road,Jaffna.
T.P No:-021 222 2831


## சாவகச்சேரி பனைதென்னை கூ.சங்கத்திற்கு புதியதலைவர்

யாழ்ப்பாணம்,ஜன.21

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக நி.பூபாலசிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் தலைவர் உட்பட நெறியாளர் குழு தெரிவு செய்யப்பட்டதாகச் சங்கப் பொது முகாமையாளர் ந.ஞானசேகரம் தெரிவித்தார்

யாழ்.மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் முன்னிலையில் தெரிவு இடம்பெற்றது. (203-207)

## தென்மராட்சியில் வயல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.21

தென்மராட்சி பிரதேச விதைநெல் உற்பத்தித் திட்ட வயல் விழா கடந்த 18ஆம் திகதி நாவற்குளி கிழக்கில் இடம்பெற்றது.

கைதடி கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் ஆ.சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர் தி.சிவகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாகாண விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் இவ்விழா நடத்தப்பட்டது. (203-207)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் செல்லையா செல்வராசா

எமது பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினரும் நலன் விரும்பியுமான செ.பிரதீபன் மற்றும் SCF இன் எமது பாடசாலை உதவியாளர் செல்வி செ.கஜேந்தினி ஆகியோரின் அன்புத் தந்தை செல்லையா செல்வராசா அவர்களின் திடீர் மறைவினால் துன்புற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

தேவாலய வீதி,
சங்கானை.

பாடசாலைச் சமூகம்,
யா/சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலை.

(70291)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## புறநிலைப் படிப்புகள் அலகு

### சுகவாழ்வு
### பொது விரிவுரைத் தொடர் - 1
### &
### மனோலயம் ஆக்க இசை அனுபவம்

இடம்: கைலாசபதி கலையரங்கு
நேரம்: காலை 9.30 11.00 மணி
காலம்: 22.01 2008 (தைப்பூச நன்னாள்)
தலைமை: கலாநிதி க.சிவபாலன் (பீடாதிபதி மருத்துவபீடம்)
நிகழ்வினை ஆரம்பித்து வைப்பவர்: பேராசிரியர் என்.சண்முகலிங்கன் (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
விடயம்: சுகவாழ்வு: சுகமான வாழ்வுக்கு நலமான இதயம்
கருத்துரை வழங்குபவர்: வைத்திய கலாநிதி பி. லக்ஷ்மன் (இருதய சிகிச்சை நிபுணர்)
ஆக்க இசை
வழங்குபவர்: ஆர்.குகானந்தன்

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

18.01.2008. (சி/551153) **பதிவாளர்.**


# IBMS
## கணனிக்கற்கைநெறிகள்

1. Dip. in Microsoft Office
2. Dip. in DeskTop Publishing
3. Dip. in Internet Technology
4. Dip. in Hardware Technology

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I : 03.01.2008
பிரிவு II : 12.01.2008
பிரிவு III : 23.01.2008
காலை 10.00 மணி

Institute of Business Management Studies

Head Office: # 209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8060
Branches : • நெ.ம.ம.வி வீதி, நெல்லியடி,
• சங்கத்தானை, சாவகச்சேரி.


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பூவுலகில் 15.02.1946



சொர்க்கத்தில் 22.12.2007

### திருமதி விஜயகாந்தன் ஜெயலட்சுமி

பெற்றெடுத்த நாள் முதலாய் பிரியமுடன் எமை அணைத்தே
உற்றதெல்லாம் எமக்களித்து உவகை கொண்ட அம்மாவே!
நீர் செய்த சேவைக்கு இவ்வுலகம் போதாது
உம்மை விட இவ்வுலகில் ஈடு செய்ய உறவேது

ஈராண்டு முன்னாலே உன் முகம் பார்த்தோமே தாயே
இவ்வாண்டு உன் வரவுக்காய் காத்திருந்த வேளை
நோய் வடிவில் காலன் உமை கவர்ந்தான் என்று
பறந்து வந்த செய்தி கேட்டுப் பதைபதைத்துப் போனோமே

உயிரினும் மேலாக எமை நேசித்தவளே
உன் குரல் கேளாது துடிக்கின்றோம் இன்று
அருகிருந்து உன் கடன் செய்யாதபாவிகளாய்
மனம் நொருங்கிப் புலம்புகின்றோம் அம்மா...!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

கடந்த 22.12.2007 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கண்ணீர் அஞ்சலி மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இன்று (21.01.2008) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொட்டிலடி,
சங்கானை. (70256)

பிள்ளைகள்:
[illegible]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 31.08.1934



மறைவு 22.12.2007

### அமரர் சபாபதி தனபாலன்

மாயமாய் உங்கள் வாழ்க்கை முடிந்தின்று மாதம் ஒன்று
போயினும் எங்கள் சிந்தை உங்களை மறவாதையா!
தூயனாய் வாழ்ந்து நீங்கள் தரணியில் புகழ் பெற்றீர்கள்
தாயதைப் பிரிந்த கன்றாய் உறவுகள் துயரில் ஆழ்ந்தார்.
எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோமாக.

**குடும்பத்தினர்.**

"சிவமஹால்",
இணுவில் தெற்கு,
நீர்வேலி. (70297)

ஸ்ரீமோகன் - 004723336692,
விஜயஸ்ரீ - 004741312929.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவினால் ஏதேனும் காத்திரமாகச் சாதிக்க முடியுமா?

கடந்த ஒன்றரை வருடங்களாக அறுபதுக்கும் அதிகமான அமர்வுகளை நடத்திய அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு, நீண்ட இழுபறியின் பின்னர் ஒருவாறு ஏதோ ஒரு சிபார்சைச் செய்யும் நிலைவரை எட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

நேற்றுப் பிற்பகல் அக்குழுவின் கடைசிக் கூட்டம் ஒன்று - சுமார் ஆறு மணி நேரம் நடத்தத் திட்டமிடப்பட்ட 'மரதன்' அமர்வு ஒன்று - ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ஏதேனும் வித்தியாசமான முடிவு செய்யப்பட்டாலன்றி அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் சிபார்சு அடங்கிய அறிக்கை ஒன்று நாளை மறுதினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக தென்னிலங்கை முன்வைக்கப்போகும் சிபார்சுத் திட்டத்துக்கான நகல் வரைவு வடிவமாக இது முன்மொழியப்படும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையில் சிறுபான்மையினருக்கான அதிகாரப் பரவலாக்கல் திட்டமாக முன்வைக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கி 1988 இல் இலங்கை அரசமைப்புக்கு பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இருபது வருடங்களுக்கு முன்னர் பிரேரிக்கப்பட்டு, சட்டமாக்கப்பட்டு, பின்னர் மாறி, மாறி வந்த சிங்கள அரசுகளால் நடைமுறைப்படுத்தப்படாமல் குப்பைக்கூடைக்குள் தூக்கிக் கடாசப்பட்ட இந்தப் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தையே, அதிகாரப் பரவலாக்கலுக்கான தனது சிபார்சு யோசனையாக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வைக்க வேண்டும் என்பது கொழும்பு அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலாக இருந்தது. அந்தத் தீர்மானத்துக்கு வருமாறு அக்குழுவின் மீது தனது செல்வாக்கைப் பிரயோகித்து அழுத்தம் கொடுத்தார் அரசுத் தலைவர் என்பதும் பகிரங்கமான 'இரகசியம்'.

இறுதித் தீர்வு எட்டும் வரை பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்த விடயங்களை இடைக்கால அம்சமாக நடைமுறைப்படுத்தலாம் என்ற தீர்மானத்தை எடுத்ததன் மூலம், அரசுத் தலைவரின் அழுத்தத்துக்கு ஓரளவு மசிந்து கொடுத்த அனைத்துக் கட்சிக்குழு, எனினும் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று சில விடயங்களை அதிகாரப் பகிர்வு செய்யும்படி வலியுறுத்தியதன் மூலம், தனது தனித்துவத்தையும் ஓரளவு வெளிப்படுத்தியிருக்கின்றது என விமர்சிக்கும் அரசியல் அவதானிகளும் உள்ளனர்.

ஆனாலும், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவினால் முன்வைக்கப்படும் எந்த யோசனையும் எவ்வளவு தூரம் செல்லுபடியானது, ஏற்றுக்கொள்ளத்தக்கது, நியாயமானது, காத்திரமானது, சாத்தியமானது, காலாதி காலமாகப் பாதிக்கப்பட்டுவரும் சிறுபான்மையினரின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடியது என்பவையெல்லாம் ஆராயப்பட வேண்டிய விடயங்கள்.

இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான கட்சிகள் பலவும் இந்த அனைத்துக் கட்சிக் குழுவில் இல்லை. எஞ்சிய கட்சிகளைக் கூட்டினால் அவை பெரும்பாலும் அரசுக் கூட்டமைப்பில் ஒட்டியிருப்பவைதாம். ஆகவே, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு சமர்ப்பிக்கும் யோசனைத்திட்டம் என்பது, அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டு யோசனை என்ற சாரப்படவே கணிக்கப்படும்.

இந்த அனைத்துக் கட்சிகள் பிரதிநிதிகள் குழுவில் பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. என்பன இல்லை. இக்குழுவின் கூட்டத்தில் ஆரம்பத்தில் பங்குபற்றிய இவ்விரு கட்சிகளும் நேரத்துடனேயே அந் நடவடிக்கையில் இருந்து ஒதுங்கிவிட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியன அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டத்துக்கு அழைக்கப்படவே இல்லை.

ஆகவே, பிரதான தரப்புகள் - கட்சிகளின் பங்குபற்றுதலின்றித் தயாரிக்கப்பட்டுள்ள இந்த யோசனைத்திட்டம் 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் சிபார்சு' என்று முன்மொழியப்பட்டாலும் கூட 'அரைக் கால்வாசிக் கட்சிகளின் யோசனைத்திட்டம்' என்று அழைக்கப்படுவதுதான் பொருத்தம்.

அத்தகைய அரைக்கால்வாசிக் கட்சிகளின் சிபார்சைக் கூட தீர்வுக்கான திட்டமாக ஏற்கும் மனநிலையில் மஹிந்தரின் அரசியல் தலைமை இல்லை என்பதுதான் வேதனையிலும் வேதனை.

இந்த சிபார்சுத் திட்டத்தை தமது அமைச்சரவையில் சமர்ப்பித்து ஒரு தீர்மானத்தை எடுப்பார் அரசுத் தலைவர் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் சிபார்சுகளை ஏற்று, அதனடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தாம் முயன்றால் தாம் பதவி விலக வேண்டியதுதான்' - என்ற சாரப்பட, உத்தியோகப்பற்றற்ற சந்திப்பு ஒன்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார் என்றும் தகவல் வெளியாகியிருக்கின்றது.

ஆகவே, தென்னிலங்கை அரசியலைப் பொறுத்த வரை - அரசைப் பொறுத்தவரை - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கை என்பது பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் செய்வதை - நீதி செய்வதை - அடிப்படையாகக் கொண்டது அல்ல என்பதே நிலைப்பாடு. தென்னிலங்கையில் அரசு அதி காரத்தைக் கைப்பற்றி, அதைத் தக்கவைப்பதை உறுதிப்படுத்திய பின்னர், சிறுபான்மையினருக்குப் 'பிச்சையாக' கொடுக்கக்கூடியது என்ன என்பது குறித்து ஆராய்வதே தீர்வு முயற்சி என்ற சிந்தனைப் போக்காக மேலோங்கி நிற்கின் றது.

கட்சி அரசியல் கடந்து, பதவி அதிகார ஆசை என்ற இலக்குக் கடந்து, நீதி செய்யும் உறுதியோடும், நியாயத்தை நிலைநாட்டும் திடசங்கற்பத்தோடும், தீர்க்க தரிசனமான பார்வையோடும் செயற்படக்கூடிய ஓர் அரசியல் தலைமையால் மட்டுமே இலங்கையின் இனப் பூசலுக்கு நீடித்து நிலைக்கக்கூடிய நிரந்தரத் தீர்வு ஒன்றை முன்வைக்க முடியும்.

அந்தத் தகுதிக்கும் திறமைக்கும் கிட்டவே வராத மஹிந்த சிந்தனையால் இப்பிரச்சினைக்கு நியாயத் தீர்வை எண்ணிப் பார்ப்பதே சாத்தியமற்றது. அத்தகைய மஹிந்த சிந்தனைக்கு 'ஜால்ரா' போடும் அனைத்துக் கட்சிக் குழுவாலும் நியாயமான தீர்வை நோக்கி சற்றேனும் நகர முடியும் எனக் கருதுவதும் யதார்த்தமற்றது. அதுவே உண்மை நிலையுமாகும்.

# 13ஆவது சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் தீர்வு ஏற்படுவதை ஜே.வி.பி. ஆதரிக்குமாம்

### வீரவன்ஸ கூறியதாக அமைச்சர் ராஜித ஜனாதிபதிக்குத் தகவல்

கொழும்பு,ஜன.21

அரசமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்துக்கமைவாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமானால் ஜே.வி.பி. அதனை ஆதரிக்கத் தயாராக இருப்பதாக அக்கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்திருப்பதாக கட்டுமானத் துறை அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ஸ இக்கருத்தைத் தம்மிடம் தெரிவித்தார் என்று அமைச்சர் ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டுவந்திருக்கிறார்.

அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகளின் குழு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணுமானால் அதனை ஜே.வி.பி. ஆதரிக்கும் என்றும் அந்த வகையில் ஜனாதிபதியால் தீர்வொன்று முன்வைக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் ஜே.வி.பியினரை இணங்கவைக்க தம்மால் முடியும் என்று விமல் வீரவன்ஸ தனிப்பட்ட முறையில் தமக்கு தெரிவித்துள்ளார் என்று அமைச்சர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

வீரவன்ஸவுடன் தாம் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் யோசனைகள் பற்றி ஆராய்ந்துள்ளதாகவும், அக் குழுவின் யோசனைகள் குறித்தும் ஜே.வி.பியின் பிரதிபலிப்புகள் குறித்தும் அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டாம் என வீரவன்ஸ கூறியிருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பின்போது கடைசி நிமிடத்தில் ஜே.வி.பி. திடீர் முடிவெடுத்தது போன்று சர்வகட்சிக் குழு தீர்மானத்தின் மீதும் கடைசி நிமிடத்தில் திடீர் தீர்மானம் ஒன்றை ஜே.வி.பி. எடுக்கக்கூடும் என்று வீரவன்ஸ கூறியிருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன ஜனாதிபதியிடம் கூறியிருப்பதாகத் தெரிகின்றது. (ப)

# மட்டக்களப்பில் தேர்தலை அவதானிக்க 20 வெளிநாட்டுப் பார்வையாளர்கள் நியமனம்

கொழும்பு,ஜன.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களின் போது 20 வெளிநாட்டு தேர்தல் பார்வையாளர்கள் நியமிக்கப் படவிருக்கிறார்கள். ''வன்முறைகளுக்கெதிரான அமைதிப் படை'' என்ற அமைப்பிலிருந்து பவ்ரல் அமைப்பின் மூலம் இவர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்த அமைதிப்படையில் ஜப்பான் கனடா மற்றும் சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த 48 உறுப்பினர்கள் தற்போது இலங்கையில் இருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாதம் 26ஆம் திகதி அவை மீதான முடிவெடுக்கப்படும்.

தேர்தலையொட்டி பொலீஸார் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர். வேட்பாளர்கள் பற்றிய முடிவு எடுக்கப்பட்டதும் ஒவ்வொரு வேட்பாளரின் பாதுகாப்புக்குமென தலா இரு பொலீஸ் பாதுகாவலர்கள் வழங்கப்படுவார்கள்.

கலவரமான இடங்கள் என்று கருதப்பட்ட இடங்களில் இப்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர். பரிசோதனை நிலையங்கள் அதிகரிக்கப்பட்டு பொலிஸாரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. வேட்பாளர் பட்டியல் தயாரான பிறகு வேட்பாளர்களுடனான சந்திப்பொன்றைப் பொலீஸார் நடத்தவிருக்கிறார்கள்.

சமூகத் தலைவர்களுடனான சந்திப்பொன்றை நேற்று முன்தினம் பொலீஸார் நடாத்தினர்.

முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன.

பிரதித் தேர்தல் அதிகாரியாக கிருஷ்ணானந்தலிங்கம் பொறுப்பேற்றுள்ளார். இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள பகுதிகளிலேயே வாக்களிப்பதற்கு அவர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டுமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ப-203)

# இலங்கைக்கான பயணத்தைத் தவிர்க்கும்படி 5 நாடுகள் தமது பிரஜைகளுக்கு யோசனை

### உல்லாசப் பயணத்துறை மோசமாகப் பாதிப்பு

கொழும்பு, ஜன.21

நாட்டில் இன்று நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலைகளை உத்தேசித்து ஐந்து வெளிநாடுகள் தமது குடிமக்களை இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டாம் என எச்சரித்துள்ளன.

நாட்டின் பல்வேறு இடங்களிலும் பரவலாக குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுவதை உத்தேசித்து ஆஸ்திரேலியா, ஜேர்மனி, பிரிட்டன், கனடா, மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தமது பிரஜைகள் இலங்கைக்கு விஜயம் செய்வதை நிறுத்தி வைக்கும்படி ஆலோசனை கூறியுள்ளன.

போர் நிலைமை காரணமாக ஏற்கனவே உல்லாசப் பயணத்துறை மிக மோசமாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலைமையில், மேற்படி நாடுகளின் இந்த நடவ்டிக்கையினால் இலங்கை பெருமளவில் உல்லாசப் பயணத்துறை வருமானத்தை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்நாட்டு நிலைமை சீர் அடையும் வரை அங்கு தமது நாட்டு பிரசைகளை பயணம் மேற்கொள்ள வேண்டாம் என இந்த நாடுகள் அறிவுறுத்தியுள்ளன. (ப)

# கலாநிதி புஷ்பரட்ணம் பேராசிரியராகப் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ்ப்பாணக் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வந்த கலாநிதி பரமு புஷ்பரட்ணம் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். இது தொடர்பான நேர்முகத் தேர்வு கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்று, அதற்கான அங்கீகாரம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டது.

கடந்த இரு சகாப்த காலமாக இலங்கையின் பல்வேறு வட்டாரங்களில் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்டு பத்துக்கும் மேற்பட்ட நூல்களையும் 60 இற்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ள இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் இளம் வயதில் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றவர்களில் ஒருவராவார். (அ)

## நாளை

தை - 8 செவ்வாய்க்கிழமை
22.01.2008
நட்சத்திரம் : பூசம்
திதி : பூரணை முன்னிரவு : 08.12
தைப்பூசம் - பூரணை விரதம்
சுபநேரம் : 11.05 - 12.35
[illegible] : 03.35 - 05.05

# குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்கு எந்தவகையான தட்டுப்பாடும் இல்லை

### வணிகர் கழகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.21

குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்கு எந்தவகையான தட்டுப்பாடும் இல்லை என்று யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வணிகர் கழகம் தெரிவித்துள்ளதாவது-

குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்கான எந்தவகையான தட்டுப்பாடும் இல்லை.

அவ்வாறு தட்டுப்பாடு காணப்படுவதாக இருந்தால் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் கழகத்துடன் தொடர்புகொண்டால் உரிய பொருள்கள் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாகக் கூறுவதில் எந்த வகையான உண்மையும் இல்லை.

இதேவேளை, உண்மையில் பொருள்களுக்கான தட்டுப்பாடு காணப்படுமாக இருந்தால் அந்தப் பொருள்களை ஒரு வார காலத்தில் கப்பலில் முன்னுரிமை கொடுத்து எடுத்து வந்து மக்களுக்கு கிடைக்க ஆவன செய்யப்படும் - என்று தெரிவித்துள்ளது.

(203-86)

# வீதியோரங்களில் கொட்டப்படும் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பல இடங்களில், பொதுமக்கள் நடமாடும் வீதியோரங்களில் குப்பைகள் கொட்டப்படுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வகையில் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் புகையிரத நிலைய வீதியில் இவ்வாறு குப்பைகள் மற்றும் கழிவுகள் பெருமளவில் கொட்டப்பட்டுள்ளன.



இப்பகுதியால் பாடசாலை மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் போக்குவரத்துச் செய்து வருகின்றனர்.

இவ்வாறு கொட்டப்பட்டுள்ள கழிவுகளால் அப்பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுழிபுரம் விக்ரோறியா மைதானம் விஸ்தரிப்பு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதான விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்த வேலைகள் உலக தரிசன நிறுவன உதவியோடு வலி காமம் மேற்கு பிரதேச செயலக மேற்பார்வையில் நடைபெற்று வரு கின்றன. அண்மையில் கல்லூரி விளையாட்டு மைதானத் திற்கு கிழக்குப் புறமாக இருந்த தனியாருக்கு சொந்தமான நிலம் பழைய மாணவர்கள் சங்கத்தினரால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. (203-28)




ஏழாலை அருள்மிகு
ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான
**திருவிழா விசேட உற்சவங்கள்**

ரதோற்சவம்: 21.01.2008 திங்கள்
காலை 9.30 மணி
தீர்த்தோற்சவம்: 22.01.2008 செவ்வாய்
காலை 9.30 மணி
வைரவர் பொங்கல்: 25 01.2008 வெள்ளி
பிற்பகல் 1 மணி.

(70293) **தேவஸ்தானம்.**



**யாழ்ப்பாணம்-கோட்டை**
**அருள்மிகு முனீஸ்வரர்**
**தேவஸ்தான**
**தைப்பூச திருவிழா-2008**

முனீஸ்வர மெய்யடியார்களே!

நிகழும் சர்வசித்து வருஷம் தை மாதம் செவ்வாய்க் கிழமை 8 ஆம் நாள் (22.01.2008) மு.ப 11.00 மணிக்கு உருத்திரா அபிஷேகத்துடன் பூஜை ஆரம்பமாகி பின் நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வரபூஜை (அன்னதானம்) நடைபெறும்.

அனைத்து அடியார்களையும் கலந்து கொண்டு முனீஸ்வரனின் அருளைப் பெறுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

யாழ். சிறைச்சாலை
யாழ்ப்பாணம். அத்தியட்சகரும்
(70292) உத்தியோகத்தர்களும்.



**வடமராட்சி நெல்லியடியில்**
**NELLIADY CLINIC**
MEDICINE AND SURGERY

பொன். கந்தையா லேன். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி.

22.01.2008 செவ்வாய்க்கிழமை
முதல் நெல்லியடி கிளினிக்
உங்களுக்காகச் செயற்படுகின்றது.

* யாழ்.போதனா வைத்தியசாலை MBBS வைத்தியர்களின் சேவை
* வைத்திய நிபுணர்களின் CONSULTATION SERVICE
* ஆய்வுகூட வசதிகள்
* X -RAY வசதிகள்

(70286) **நிர்வாகி.**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 24 . 11 . 1942 |  | 01 . 02 . 2007 |

**அமரர் கந்தையா செல்வராசா**

திதி: 21.01.2008

அன்பின் திருவுருவே! பாசத்தின் உறைவிடமே!
பார்புகழும் உத்தமரே காரைமண் நல்மைந்தனே
மலர்ந்த முகத்துடன் வாழ்ந்து காட்டிய எம் அன்புத் தெய்வமே!
குடும்பக் கோயிலின் நல்லொளித் தீபமே!
கண்ணிமைக்கும் நேரத்தில் மனைவியின் மனம் தவித்திருக்க
பிள்ளைகள் மனம் தத்தளிக்க சகோதரர் மனம் ஏங்கியழ
எங்குதான் சென்றீரோ?
ஆண்டொன்று சென்றாலும் இதயம் மறக்குதில்லை!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நகலல்:க.தருமபாலன் (மைத்துனர்) .
60.ஈச்சமோட்டை வீதி.
சுண்டிக்குழி. யாழ்ப்பாணம். (70209)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**மனைவி, மக்கள்,**
**சகோதரிகள்.**

## தென்புலோலி அறிஞர் விழாவும் சாதனையாளர் கௌரவிப்பும்

பருத்தித்துறை, ஜன.21

தென்புலோலி பெரிய தேவனைத்தாய் சனசமூக நிலைய அறிஞர் விழாவும் சாத னையாளர்கள் கௌரவிப்பு வைபவமும் தென்புலோலி பெரிய தேவனத்தாய் பிள் ளையார் ஆலய முன்றலிலுள்ள மைதானத் தில் அண்மையில் நடைபெற்றன.

சனசமூக நிலையத் தலைவர் வி.செல்வ ராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட கிழக்கு மாகாண கரையோர சமுதாய அபி விருத்திதிட்ட பிரதிப்பணிப்பாளர் வி.வீரபத் திரபிள்ளை கலந்து கொண்டார்.

நிகழ்வில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை யில் 3ஏ சித்தி பெற்ற மாணவர்கள் கௌர விக்கப்பட்டனர். இவர்களுக்கான பாராட்டு ரையை வடமராட்சி வலய பிரதம முகா மைத்துவ உதவியாளர் ஆ.புண்ணிய மூர்த்தி நிகழ்த்த அவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் வழங்கினார்.

தொடர்ந்து நிலைய முன்பள்ளி ஆசிரியை திருமதி உமாலினி இராகவனின் சேவையும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது.

விழா ஆரம்பத்தில் புலோலி அறிஞர்க ளான தமிழ்த்தாத்தா கந்த முருகேசனார், க.முருகேசம்பிள்ளை, பண்டிதர் பொன். சின்னத்துரை ஆகியோரது திருவுருவப் படங் களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (203-218)

## தென்மராட்சி வலயத்தில் பெப்ரவரி 15 இற்கு முன்னர் மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

முதலாம் தவணையில் மெய்வன்மைப் போட்டிகளை நடத்துமாறு அறிவிக்கப் பட்டதையடுத்து மாணவிகளிடையே தெரி வுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

அனைத்துப் பாடசாலைகளும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் போட்டிகளை நடத்தி முடிக்க ஏற்பாடுகள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## பண்டத்தரிப்பு இந்துவில் புனரமைப்புப் பணிகள்

வலி.தென்மேற்கு, ஜன.21

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணை யுடன் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக் கிணறு அண்மையில் புனரமைப்புச் செய் யப்பட்டுள்ளது.

இதே வேளை- கல்லூரியின் மாடிக் கட்டடத்தில் உள்ள மண்டபமும் இந்த நிறு வனத்தின் அனுசரணையுடன் தனித் தனி வகுப்பறைகளாகப் பிரிக்கப்பட்டு புனர மைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதனால் இங்கு நிலவிவந்த வகுப்பறை களுக்கான பற்றாக்குறை நீங்கியுள்ளதாகக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.(203-135)

## பாராட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன.21

ஆனைக்கோட்டை உயரப்புலம் குண பாலன் வித்தியாலய சங்கீத பாட ஆசி ரியை திருமதி திருமகள் பொன்னம்பலத் தின் சேவைநலன் பாராட்டு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் அதிபர் நா. தனபால சிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலிகாமம் வலய உத விக் கல்விப் பணிப்பாளர் வி.நாகேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள் வார். (203)

* * *

வலி.வடக்கு, ஜன.21

மல்லாகம் மகாவித்தியாலயத்தின் முன் னைநாள் கணித ஆசான் சின்னையா டியூக் பல்குணன்லாலா அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு க.திருக் குமார் தலைமையில் மல்லாகம் மகாவித் தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள் ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தின ராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சு.முரளிதரன், தெல்லிப்பழை கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப் பாளர் ச.கைலாசநாதன் வலிகாமம் கல் விவலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப் பாளர் மு.நடராசா, காங்கேசன்துறை இலங் கைவங்கி முகாமையாளர் பே.பிரான்ல ின், வலிகாமம் கல்வி வலய கணித உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுகுமாரன் ஆகியோ ரும் கலந்துகொள்வர். (203-86)




**அறிவித்தல்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அமுதசுரபி அன்னதானசபை
தைப்பூச அன்னதானம்

அம்பிகை அடியார்களே!

நாளை (22.01.2008) செவ்வாய்க் கிழமை நடைபெற இருக்கும் தைப்பூச விழாவை முன்னிட்டு அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு வழமைபோல் அன்னதானம் வழங்க எமது சபையில் சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்கள் அம்பாளைத் தரிசித்தபின் சபைக்குச் சமுகமளித்து அன்னதானத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

(70250) **நிர்வாகம்.**


## முதலாம் ஆண்டு நினைவு நாள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 10 . 02 . 1928 |  | 01 . 02 . 2007 |

**திருமதி அகிலாண்டேஸ்வரி சின்னத்தம்பி**


பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி
பாரினிலே எம்மை வளம்பெற வைத்த
எம் அன்னையே! ஓராண்டாக
உம்மை இழந்து அனுதினமும்
நாம்படும் வேதனையைப் போக்கிட
நம்மிடம் ஒரு தடவை வாராயோ!

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

ச.சி.கந்தசாமி
(மகன்-டென்மார்க்).

(4/551155)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 21 . 06 . 1932 |  | 20 . 12 . 2007 |

**அமரர் சிவகுரு கனகலிங்கம்** (சின்னத்துரை)

வட்டுக்கோட்டை

பாசமுள்ள அன்புத்தெய்வம் அப்பாவே இனி எப்போது காண்போம்
உம்மை பிரிந்த வேதனையில் கேட்கின்ற ராகம்
எல்லாம் சோககீதமாய் மனதை உருக்குது ஆறாத்துயரில்
கண்ணீர் பெருகுது தீராத வேதனையில் வாடி நிற்கின்றோம்
உயிர் உள்ளவரை உம்மை மறவோம் உமது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"சிங்கவாசம்".
பழையஆஸ்பத்திரி வீதி.
வட்டு தென்மேற்கு. வட்டுக்கோட்டை.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், மனைவி- செல்வராணி, மகன்-வாசுதேவன், மகள் -அபர்ணா, சகோதரி- ராசம்மா.

(70251)

## மரண அறிவித்தல்

### ஞானப்பிரகாசம் கீதபொன்கலன்

சென்.ஜேம்ஸ் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் கீதபொன்கலன் நேற்று முன்தினம் (19.01.2008) சனிக்கிழமை காலமானார், அன்னார் இராக்கினியின் அன்புக் கணவரும் சார்ள்ஸ், சகுந்தலா, ரவி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21.01.2008) திங்கள் பிற்பகல் 3 மணிக்கு இளவாலை புனிதயாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் புனிதயாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி: இராக்கினி கீதபொன்கலன்,
பிள்ளைகள்,
சென்.ஜேம்ஸ் வீதி, மைத்துனர்: அருட்பணி எஸ்.டேமியன்
இளவாலை. (அ.ம.தி.) (70352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியின் ஆணவத்தை அடக்கிய இந்திய அணி

''இந்தியாவில் உள்ளது போன்ற தன்மை கொண்ட ஆடுகளம் மெல்போண். இங்கேயே அவர்களால் சமாளிக்க முடியவில்லை என்றால் அடுத்த போட்டிகளில் (பேர்த்தை மனதில் வைத்து) அவர்கள் பயங்கரமாகத் திணறுவார்கள்'' என்று முதல் டெஸ்ட் வெற்றிக்கு பிறகு ரொம்பவும் ஏகத்தாளமாக பேசினார் ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங்.

அவருக்கு, 'வல்லவனுக்கு வல்லவன்' வையகத்தில் உண்டு என்ற முதுமொழியை நினைவுபடுத்தியிருக்கிறது இந்திய அணி.

2005ஆம் ஆண்டு இறுதியில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக தனது வெற்றிப் பயணத்தைத் தொடங்கிய ஆஸ்திரேலியா, அந்த அணிக்கு எதிராக 5 வெற்றி, பங்களாதேஷுக்கு எதிராக 2வெற்றி, இங்கிலாந்துடன் 5 வெற்றி, இலங்கையுடன் 2 வெற்றி, அதன் பிறகு இந்தத் தொடரில் இந்தியாவுடன் முதல் 2 போட்டிகளில் வெற்றி என்று தொடர்ச்சியாக 16 டெஸ்ட் வெற்றிகளைச் சுவைத்தது.

தங்களது அணியின் முன்னைய சாதனையை முறியடித்து புதிய உலக சாதனை படைக்க ஆஸி. அணிக்கு இன்னும் ஒரு வெற்றிதான் பாக்கி இருந்தது. அதுவும் பேர்த்தில் போட்டி நடப்பதால் ஆஸ்திரேலியாவின் சாதனை சுலபமாக நிகழக்கூடும் என்று கிரிக்கெட் நிபுணர்கள் ஆருடம் சொன்னார்கள். காரணம், பேர்த் ஆடுகளம் பயங்கரமாக எகிறிச் செல்லும் வகையில் ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர்களுக்கு ஏற்ற மாதிரி உருவாக்கப்பட்டிருந்தது. இதனால் 16 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முதலாக 4 அதிவேகப் பந்துவீச்சாளர்களுடன் 3ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸி. களமிறங்கியது. இவர்களுக்கு முன்னால் இந்தியா தாக்குப்பிடிக்குமா என்பதே அனைவரின் புருவங்களும் உயர்த்தியபடி கேட்ட கேள்விகள்.

எல்லாவற்றுக்கும் ஒட்டு மொத்தமாக தனது கூட்டு முயற்சி மூலம் வேட்டு வைத்திருக்கிறது இந்திய அணி. ஆஸியின் ஒவ்வொரு திட்டமிடலையும் முறியடித்து சிறப்பு வாய்ந்த ஒரு வெற்றியை பெற்றிருக்கிறது இந்தியா. ஆஸ்திரேலியாவின் வெற்றிப் பயணத்துக்கு சிட்னி டெஸ்டிலேயே முடிவு கட்ட வேண்டியது. ஆனால், அங்கு நடுவர்கள் பக்னர், மார்க் பென்சன் ஆகியோரின் துணையுடன் அழுகுணி ஆட்டம் ஆடி ஆஸ்திரேலியா வெற்றி பெற்றுவிட்டது. அந்தச் சச்சரவு, மோதல்கள் கூட இந்தியா வெகுண்டெழ ஒரு காரணமாக அமைந்திருந்தது எனலாம்.

பேர்த் அரங்கில் 1977ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக ஆஸ்திரேலிய அணி தோல்வியைச் சந்தித்துள்ளது. அதுதவிர 2003ஆம் ஆண்டுக்கு பிறகு முதன்முறையாக சொந்த மண்ணில் தோல்வியடைந்துள்ளது. அத்துடன் பொண்டிங் தலைமைக்கு சொந்த மண்ணில் கிடைக்கும் முதல் டெஸ்ட் தோல்வி இதுவாகும்.

சர்ச்சைக்குரிய சிட்னி போட்டியில் நடுவர்கள் இந்தியாவுக்கு எதிராக தீர்ப்பு அளிக்காமலிருந்திருந்தால், தொடரின் நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும். ஒருவேளை நடுவரின் முடிவுகளை எதிர்த்து நாடு திரும்பியிருந்தாலும், தோல்விக்கு பயந்து இந்திய அணி நாடு திரும்பிவிட்டது என்ற அவப்பெயர் ஏற்பட்டிருக்கும். இந்தப் பிரச்சினைகளுக்கு மூக்குடைக்கும் விதமாக இந்தியாவின் பேர்த் வெற்றி அமைந்துவிட்டது.

சாதனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதில் ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தையும் 'குறிப்பிட்டாக வேண்டும். இப்படித்தான் தொடர்ச்சியாக 15 டெஸ்ட் வெற்றிகளை பெற்று சாதனையுடன் 2001ஆம் ஆண்டு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு இந்தியா வந்த ஸ்ரீவ் வோ தலைமையிலான ஆஸ்திரேலிய அணி, மும்பையில் நடந்த முதல் டெஸ்ட்டில் வெற்றிபெற்று தனது 16ஆவது வெற்றியைப் பதிவு செய்தது. அதன்பிறகு கொல்கத்தாவில் நடந்த டெஸ்ட்டில், இந்தியா 'பலோ - ஒன்' ஆகிய பிறகும் பிரமிக்கத்தக்க வகையில் விளையாடி, ஆஸ்திரேலியாவின் வெற்றி நடைக்கு தடைபோட்டது. அந்தப் போட்டியில் லக்ஸ்மன் குவித்த 281 ஓட்டங்களும், டிராவிட் சேர்த்த 180 ஓட்டங்களும், ஹர்பஜன்சிங்கின் 'ஹட்ரிக்' விக்கெட்டுகளும் ஆஸ்திரேலியாவின் சாதனையை முடிவுக்கு கொண்டுவர உதவிகரமாக இருந்தன.

இப்போது ஹர்பஜன்சிங் இல்லாவிட்டாலும் முதல் இன்னிங்ஸில் டிராவிட் விளாசிய



93 ஓட்டங்களும், 2ஆவது இன்னிங்ஸில் இக்கட்டான நிலையில் லக்ஸ்மன் சேர்த்த 79 ஓட்டங்களும் இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை உயர்வுக்கு முக்கிய பங்காற்றின. மீண்டும் அதே போன்ற ஒரு நிகழ்வை நம் கண்முன் நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால், ஒரேயொரு வித்தியாசம்தான். அன்று கங்குலி தலைமையிலான இந்திய அணி இச்சிறப்பை பெற்றது. இன்று கும்ளே தலைமையிலான அணிக்கு அந்தப் பெருமை கிடைத்துள்ளது அவ்வளவுதான்!




# சிறந்த வெற்றியில் ஒன்று

## கும்ளே பெருமிதம்

பேர்த் டெஸ்ட் வெற்றிக்கு பிறகு இந்திய அணித்தலைவர் கும்ளே கூறியவை வருமாறு:-

எனது கிரிக்கெட் வாழ்க்கையில் மிகச்சிறந்த டெஸ்ட் போட்டிகளில் ஒன்று. பேர்த்தில் விளையாடுவதற்கு எங்களுக்குப் பெரும்பாலும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. இருப்பினும் மிக அபாரமாகத் துடுப்பெடுத்தாடினோம். டெண்டுல்கர், டிராவிட், ஷேவாக், லக்ஸ்மன் ஆகியோர்முதல் பின்வரிசையில் டோனி, ஆர்.பி.சிங் வரை சிறப்பாகத் துடுப்பாட்டம் செய்தார்கள். இஷாந்த் ஷர்மா சிறப்பாகப் பந்துவீசினார். முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீநாத் தனது இளமை காலங்களில் எப்படி இருந்தாரோ, இதே போன்று இஷாந்த்தின் செயல்பாடும் உள்ளது.

சிட்னி டெஸ்ட் போட்டியில் ஹர்பஜன் விவகாரத்துக்கு பிறகு நாங்கள் அனைவரும் ஒருங்கிணைந்தமை இந்த வெற்றிக்கு ஒரு காரணமாகும். அந்தச் சர்ச்சைக்கு பிறகு எங்கள் முன் இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒன்று நாடு திரும்ப வேண்டும் என்பது. மற்றொன்று ஆஸ்திரேலியாவை வெல்லும் திறமைமிக்க அணி என்பதை நிரூபிக்க வேண்டும். இப்போது அதைச் செய்திருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. ஆஸ்திரேலியாவை வீழ்த்தி எங்களது பலத்தை நிரூபித்திருக்கிறோம்.

இந்தப் போட்டியில் இரண்டு அணிகளும் முழு உத்வேகத்துடன் ஆடின. ஆனால், நாங்கள் நன்றாக ஆடினோம். ஆட்டத்தின் ஏதாவது ஒரு பகுதியில் நாங்கள் சோடை போயிருந்தாலும், அவர்கள் சரிவில் இருந்து மீண்டு இருப்பார்கள். இந்த வெற்றியின் மூலம் நாங்கள் மேலும் நம்பிக்கை வளர்த்து, அடுத்ததாக அடிலெய்ட்டில் நடக்கவிருக்கும் கடைசிப் போட்டியிலும் வெற்றிபெற்று போட்டித் தொடரை சமனிலை செய்ய முயற்சிப்போம்.'' - இவ்வாறு கும்ளே கூறினார்.

தோல்வி குறித்து ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங் கூறுகையில், 'தொடர்ச்சியான 16 டெஸ்ட் வெற்றி என்பது சாதனைதான். இன்னும் ஒரு வெற்றி பெற்றிருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால், அதற்கு ஏற்ற வகையில் எங்களது ஆட்டம் சிறப்பாக அமையவில்லை. முதல் இன்னிங்ஸில் எங்களது துடுப்பாட்டம் சரியில்லை.

'இந்தியா மிகச்சிறந்த அணி. நாங்கள் எப்போதுமே எதிரணியை குறிப்பாக இந்திய அணியை குறைத்து மதிப்பிட்டதில்லை. இந்தியா பலம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்டது என்பது எங்களுக்கு தெரியும். இப்போது அவர்களது பந்துவீச்சாளர்கள் கடினமான பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். அடிலெய்ட் டெஸ்ட்டில் நாங்கள் எங்களது பழைய நிலைமைக்குத் திரும்புவோம்.'' - என்றார்.

# முத்தரப்புத் தொடரிலிருந்து டிராவிட், கங்குலி நீக்கம்

மும்பை, ஜன.21

ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒருநாள் போட்டியில் பங்கேற்கவுள்ள இந்திய அணியிலிருந்து முன்னணி வீரர்களான ராகுல் டிராவிட் மற்றும் சௌரவ் கங்குலி ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். அதே வேளை, சுரேஷ் ரெய்னாவுக்கு நீண்டகாலத்திற்குப் பின்னர் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா இடையில் தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடர் முடிவடைந்ததும் முத்தரப்பு ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.

இந்தப் போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய அணியைத் தேர்வுக்குழுவினர் நேற்று அறிவித்தனர். இந்திய அணியில் முன்னாள் தலைவர்களான ராகுல் டிராவிட் மற்றும் சௌரவ் கங்குலி ஆகியோர் இடம் பெறவில்லை. வீரேந்திர ஷேவாக் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். தினேஷ் கார்த்திக் மற்றும் இர்பான் பதான் ஆகியோருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அணியின் விவரம் வருமாறு:-

மகேந்திரசிங் டோனி (அணித்தலைவர்), சச்சின் டெண்டுல்கர், வீரேந்திர ஷேவாக், யுவராஜ் சிங் (துணை அணித்தலைவர்), ஹர்பஜன் சிங், றொபின் உத்தப்பா, கௌதம் கம்பீர், இர்பான் பதான், சிறிசாந்த், ஆர்.பி. சிங். இஷாந்த் சர்மா, ரோகித் சர்மா, சுரேஷ் ரெய்னா, தினேஷ் கார்த்திக், பியூஸ் சாவ்லா மற்றும் பிரவீன் குமார்.

# இந்திய அணிக்கு மஹேல பாராட்டு

பேர்த் டெஸ்ட்டில் வெற்றி பெற்றதற்காக இந்தியக் கிரிக்கெட் அணிக்கு இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

சிட்னி டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட சர்ச்சைக்குப் பிறகு பேர்த் டெஸ்ட்டில் இரு அணிகளும் விளையாடிய விதம் பாராட்டக்கூடியது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், இந்தியா சிறப்பாக ஆடி வெற்றிபெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிவடைந்தும் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் இலங்கையும் பங்கேற்கிறது. பெப்ரவரி 2ஆம் திகதி தொடங்கும் இந்த ஒருநாள் தொடர் விறுவிறுப்பான மோதலாக [illegible] வர்த்தன கூறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுடனான ருவென்ரி/20 போட்டி

# தென்னாபிரிக்கா வெற்றி

ஜொகன்னஸ்பேர்க், ஜன.21

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ருவென்ரி/20 போட்டியில் தென்னாபிரிக்கா அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள்- தென்னாபிரிக்கா அணிகளிற்கிடையேயான 2ஆவது மற்றும் கடைசி ருவென்ரி/20 போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஜொகன்னஸ்பேர்க்கில் நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 134 ஓட்டங்களை எடுத்தது. 135 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 19.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 134 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியுடன் ருவென்ரி/20 கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெற்ற தென்னாபிரிக்கா வீரர் ஷேன் பொலக் 25 பந்துகளில் 2 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 36 ஓட்டங்களை எடுத்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா அணி 2 போட்டிகள் கொண்ட ருவென்ரி/20 போட்டித் தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்தது. முதல் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பதான் சிறந்த சகலதுறை வீரர்

## ஸ்ரீவ் வோ பாராட்டு

பேர்த், ஜன. 21

பேர்த் டெஸ்ட்டில் இந்தியாவின் வெற்றிக்கு இர்பான் பதானே முக்கிய காரணம் என்றுஆஸி. கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் ஸ்ரீவ் வோ கூறியுள்ளார்.

''இரண்டாவது இன்னிங்ஸில் அவரை 3ஆவது ஆட்டக்காரராகக் களமிறக்கியதோடு பொறுப்புடன் விளையாடி அவர் 46 ஓட்டங்களை எடுத்ததே இந்தியாவின் வெற்றிக்கு முக்கிய காரணம். சிறந்த சகலதுறை வீரர் என்பதை பதான் தொடர்ந்து நிரூபித்து வருகிறார். 4 ஆண்டுகளுக்கு முன்பு நான் அவரை முதன் முறையாகப் பார்த்தேன். அவர் பந்தை 'சுவிங்' செய்யும் முறை என்னை மிகவும் கவர்ந்தது. தொடர்ந்து அணியில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். கபில்தேவ் இடத்தை நிரப்பக்கூடியவர் பதான்.'' - என்றார் ஸ்ரீவ் வோ.

இந்தியாவின் வெற்றி குறித்து கருத்துக் கூறிய அந்த அணியின் முன்னாள் வீரர் கவாஸ்கர், ''எல்லா வீரர்களும் தங்களது பங்களிப்பை முழுமையாகக் காட்டினால் எந்த அணியையும் வீழ்த்தலாம் என்பதை பேர்த் டெஸ்ட் நிரூபித்துள்ளது. இந்தியாவின் இந்த வெற்றி வரலாற்றுச் சிறப்பு மிக்கது.'' - என்று கூறினார்.

இந்திய அணியின் தேர்வுக் குழுத்தலைவர் வெங்சர்க்கார் கூறும்போது,

''ஆஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தக்கூடிய திறமை கொண்ட அணி கும்ளே தலைமையிலான அணி என நான் நம்பினேன். அதை தற்போது நிரூபித்துள்ளனர். சிட்னி டெஸ்ட் சர்ச்சைக்குப் பின்னர் இந்தியா ஓரணியாகச் செயற்பட்டு வெற்றி பெற்றிருக்கும் விதம் பெருமிதப்பட வைக்கிறது. அடுத்த டெஸ்ட்டில் வென்று தொடரைச் சமன் செய்ய இந்திய அணி வீரர்கள் கடுமையாகப் போராடுவார்கள் என நம்பிக்கை கொள்ளலாம்.'' - என்று கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதி பிரதீபா பாட்டீல், பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மக்களவை சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி ஆகியோர் இந்தியாவின் வெற்றிக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலிய பகிரங்க டெனிஸ்

# சேரீனா, ஷரபோவா காலிறுதிக்குத் தகுதி



மெல்போண், ஜன.21

ஆஸ்திரேலிய பகிரங்க டெனிஸ் போட்டியின் காலிறுதிச் சுற்றில் விளையாட முன்னணி வீராங்கனைகளான செரீனா வில்லியம்ஸ், மரியா ஷரபோவா மற்றும் ஜஸ்ரின் ஹெனின் ஆகியோர் நேற்றுத் தகுதிபெற்றனர்.

நேற்று நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் முதல்நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் ஜஸ்ரின் ஹெனின் 6:2, 6:2 என்ற நேர் செற்கணக்குகளில் தைபே வீராங்கனையான ஹய்ஸ் சூவை என்பவரை இலகுவாக வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

நடப்புச் சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், செக். குடியரசின் நிக்கோலே வைடிசோவாவை 6:3, 6:4 என்ற நேர் செற்களில் வெற்றிகொண்டு காலிறுதிக்கான எட்டு இடங்களில் தன்னையும் ஒருவராக இணைத்துக் கொண்டார். ரஷ்யாவின் மரியா ஷரபோவா சக வீராங்கனையான எலீனா டெமன்ரீவாவை 6:2, 6:0 என்ற நேர் செற்கணக்குகளில் வெற்றி கொண்டு காலிறுதியில் இடம்பிடித்தார்.

முன்னதாக நேற்றுமுன்தினம் நடந்த ஒற்றையர் மூன்றாவது சுற்றுப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்ஸா, அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸை எதிர்கொண்டார். முதல் செற்றைக் கடும் போராட்டத்துக்குப் பின் 6:7 என சானியா கோட்டை விட்டார். அடுத்த செற்றையும் 4:6 என இழந்தார். இறுதியில் சானியா 6:7, 4:6 என்ற நேர் செற்களில் தோல்வியைத் தழுவி ஒற்றையர் பிரிவு ஆட்டங்களிலிருந்து வெளியேறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொனறாகலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு காத்திருப்பதற்கான சந்தேகத்தை ஏற்படுத்தியது.

ஆயுததாரிகளில் ஒருவர் தனது முதுகில் பெரிய தொலைத் தொடர்புக்கருவி ஒன்றை வைத்திருந்தார். அதன் அலைவாங்கி மிகவும் நீளமாக இருந்தது. இது அவர்கள் வேறு ஒரு தளத்துடன் உள்ளவர்களுடன் தொடர்பில் இருப்பதனை உறுதிப்படுத்துகின்றது. அவர்கள் எல்லோரும் தாக்குதல் துப்பாக்கிகளை ஏந்தியிருந்தனர்.

**விரைவில் செய்தி வரும் என்றார்**

வேலைக்குச் சென்ற மனல் விஜேசிங்க, தனது சகாக்களிடம் வெலிபர சந்தியில் ஏதோ ஒரு நடவடிக்கைக்காக இராணுவத்தினர் தயாராக இருக்கின்றனர் எனக் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளை இராணுவத்தினர் விரைவில் சுற்றிவளைத்துப் பிடித்துள்ளனர் என செய்திவரும் எனவும் அவர் தெரிவித்தார்.

காலை 7.25 மணியளவில் பஸ் ஒன்று சில பத்துப் பயணிகளுடன் வெலிபரச் சந்தியைக்கடந்து சென்றது. அதன் பின்னர் ஆயுததாரிகளைக் காண்பதற்காக சில கிராமவாசிகள் வெலிபரச் சந்தியை நோக்கிச் சென்றனர். ஆனால், அவர்களைக் கலைந்து செல்லுமாறு ஆயுததாரிகள் சைகை காட்டினர். எனவே, இராணுவத்தினர் தாக்குதல் ஒன்றுக்காகப் பதுங்கியிருப்பதாகவே அவர்கள் நம்பினர்.

7.35 மணியளவில் தரித்து நின்ற பஸ் வெலிபர சந்தியை அண்மித்தது, அப்போது கிளைமோர் வெடித்தது. பஸ்ஸில் இருந்து தப்பிச் செல்ல முயற்சித்தவர்களின் மீது மறைந்திருந்தவர்கள் துப்பாக்கிச் சூட்டினை நடத்தினர். அதன் பின்னர் மறைவிடத்தில் இருந்து வெளியில் வந்த ஆயுததாரிகள் கடுமையான துப்பாக்கிச் சூட்டினை நடத்தியதுடன், ஒருவர் முன் வாசல் வழியாக பஸ்ஸிற்குள் ஏறி அருகில் இருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டினை நடத்தியுள்ளார்.

கிளைமோர்த் தாக்குதலில் 10 பயணிகளே காயமடைந்திருந்தனர். ஆனால், சம்பவத்தில் 27 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 51 பேர் காயமடைந்துள்ளனர். பின்னர் முற்பகல் 11 மணியளவில் அவர்கள் அங்கிருந்து பயிர்ச்செய்கைப் பகுதிக்குச் சென்றனர். அங்கு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த விவசாயிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 5 விவசாயிகள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

முற்பகல் 9.55 மணியளவில் இந்த செய்தி இராணுவத்தினரின் சிறப்பு அணியினரின் பயிற்சிப் பாசறையான கல்கே பகுதி முகாமுக்கு எட்டியது. அது கதிர்காமத்திற்கும் புத்தள பகுதிக்கும் இடையில் உள்ளது. தளத்தில் இருந்த அதிகாரி, மூன்று படையினருடன் அருகில் இருக்கும் இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரை எச்சரிக்கும்நோக்குடன் 'யுனிகோன்' கவச வாகனத்தில் சென்றார். அப்போது மிகவும் சக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு ஒன்று வெடித்ததினால் அதில் சென்ற மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர். அவர்கள் அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (சி)

## கருணாவுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் துணை இராணுவக் குழுக்களின் தலைவர்களில் ஒருவராக விளங்கிய கருணா, அண்மையில் பிரித்தானியாவுக்குச் சென்றிருந்தார். இவரது பயணத்திற்கான ஏற்பாடுகளை அரசு செய்திருந்தது எனவும், இதன்போது இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டு அவருக்கு வழங்கப்பட்டது எனவும் கூறப்பட்டது.

எனினும், விநாயகமூர்த்தி முரளீதரன் எனப்படும் கருணா பிரித்தானியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். கடந்த வருடம் டிசம்பர் மாதம் பிரித்தானிய நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளின்போது கருணா தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் அவருக்கு 24 மாதங்கள் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டது.

பிரித்தானியாவின் ஒக்ஸ்பிறிட்ச் பகுதியில் உள்ள நீதிமன்றத்தில் டொக் பிறைஸ் மற்றும் ஜெஃப் எட்வேட் ஆகிய நீதிபதிகளுக்கு முன்பாக வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (சி)

## வவுனியா, மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் சடலங்களையும் ரி-56 ரக துப்பாக்கி ஒன்றையும் இராணுவத்தினர் மீட்டுள்ளனர் என்றும் விடுதலைப் புலிகளின் 8 பதுங்கு குழிகள் முற்றாக அழிக்கப்பட்டன என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, மன்னார் மடுப் பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது இரு விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. இம்மோதல்கள் தொடர்பாக புலிகள் தரப்பில் இருந்து எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை.


ICT Classes

For Grade 10,11 & GIT

Commence on 22.01.2008

Medium : English / Tamil

P.R.Najan.B.Sc

150/2, Kulapiddy Junct., K.K.S.Rd.,Kokuvil.

T.P:- 0602214204/0773086808



**முக்கிய அறிவித்தல்**

டிப்ளோமா ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் (DETE) முக்கிய கூட்டம் நாளை (22.01.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் (பெருமாள் கோவிலுக்கு முன்பாக) நடைபெறும்.

*பட்டமளிப்பு விழா படங்களைப் பெற்றுக் கொள்ளவும்

தலைவர், (DETE) சங்கம்.



**மிருதங்க வகுப்புகள்**

பிரபல மிருதங்க ஆசிரியரினால் சகல தரங்களுக்குமான மிருதங்க வகுப்புகள் ஆரம்பம் 22.01.2008 செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணி (தைப்பூசம்)

தொடர்பு:- சி. துரைராசா

28/16, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(70351)



**Microsoft Certified Systems Engineer**

பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்

- குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
- Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
- Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
- வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 22.01.08 (10 a.m. (Poya Day))

பாலகங்கள் விருப்பிற்கு மேலதிக வகுப்பு நேரங்கள்

MGS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

Supported By UNDP/URRP


## சர்வதேச சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்து வீசிய அரசு, தமிழ் மக்களை அன்றி சர்வதேச சமூகத்தை மாத்திரம் திருப்திப்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்போகும் இத்தீர்வுத்திட்டம் தமிழர்களுக்குச் சற்றும் பயனற்றது என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

தீர்வுத்திட்டம் நல்லதாக இருந்தாலும் சரி பிழையாக இருந்தாலும் சரி அத்திட்டத்தை ஜே.வி.பியினரும் ஜாதிக ஹெல உறுமயவினரும் முளையிலேயே கிள்ளி விடுவர் என்று தெரிவிக்கும் கூட்டமைப்பு இத்திட்டம் தொடர்பாக தாம் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என்றும் கூறியுள்ளது.

இது தொடர்பாக கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்பிபா.அரியநேத்திரன்கூறியவை வருமாறு:-

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவால் புதன்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவிருக்கும் தீர்வுத் திட்டத்தை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்து வீசிய அரசு சர்வதேசத்தைத் திருப்திப்படுத்த சமாதான விரும்பி போல் சர்வதேசத்திற்குத் தன்னைக் காட்டவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

**20 வருடங்களுக்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட திட்டம்**

இதன் காரணமாகவே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்து வீசிய கையோடு ஏதாவதொரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்துவிட வேண்டும் என்ற முனைப்பில் அரசு உள்ளது.

எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத - தான் மட்டும் விரும்புகின்ற - மாகாணசபை முறைமையை சர்வதேச பிரதிநிதிகள் குழுவின் ஊடாக ஜனாதிபதி கொண்டுவருகிறார். நடைமுறைக்குச் சாத்தியப்படாத இத்தீர்வுத்திட்டம் 20 வருடங்களுக்கு முன்பே நிராகரிக்கப்பட்டுவிட்டது. காலத்திற்குச் சற்றும் ஒத்துவராத இத்தீர்வுத் திட்டத்தை இப்போது தூசி தட்டிக் கொண்டுவந்து சர்வதேசத்தையும், தமிழ் மக்களையும் ஏமாற்ற ஜனாதிபதி முற்படுகின்றார். இத்தீர்வுத்திட்டம் நல்லதாக இருந்தாலும் சரி பிழையாக இருந்தாலும் சரி அதை முளையிலேயே கிள்ளி வீசும் நிலைப்பாட்டில் ஜே.வி.பியினரும் ஜாதிக ஹெல உறுமயவினரும் உள்ளனர்.

இவர்களைத் தன்னோடு வைத்துக்கொண்டு ஜனாதிபதியால் தமிழ் மக்களுக்கு எதையும் செய்ய முடியாது. தொடர்ந்தும் அவர் இப்போதுபோல் சர்வதேசத்தையும் இந்நாட்டுத் தமிழ் மக்களையும் ஏமாற்றவே போகின்றார். முன்வைக்கப்படும் தீர்வுத்திட்டம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்ற - அவர்களை முழுமையாகத் திருப்திப்படுத்துகின்ற தீர்வுத்திட்டமாக இருக்கவேண்டும். அப்படி இல்லாதுவிடில் முன்வைக்கப்படும் எந்தத் தீர்வுத்திட்டத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். - என்றார். (சி)

## லூயிஸ் ஆர்பர் பயங்கர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரவன்ஸ இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இலங்கையில் தொடரும் வன்முறைகளால் பொதுமக்கள் காயமடைந்தால் இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றுக்கு அழைத்து விசாரிக்க வேண்டும் என லூயிஸ் ஆர்பர் கருத்துத் தெரிவித்துள்ளார். இக்கருத்து மூலம் பயங்கரவாதத்தைத் தூண்டிவிட அவர் முயற்சித்துள்ளார். அரசையும், பாதுகாப்புப் படைத் தரப்பினரையும் மிரட்டும் நோக்கிலும், விடுதலைப் புலிகளுக்கு உதவும் எண்ணத்திலும் அவர் இக்கருத்தை முன்வைத்துள்ளார் என்று நாம் கருதுகிறோம்.

**அமெரிக்க ஜனாதிபதியையும் நீதிமன்றில் நிறுத்தவேண்டும்**

ஐ.நாவின் மனித உரிமைக் கவுன்ஸிலின் ஆணையாளர் உண்மையிலேயே மனித உரிமை விடயங்களில் அக்கறையுடன் பணியாற்றும் ஒருவராக இருப்பின் முதலில் அவர், ஈராக்கில் இழைத்துவரும் குற்றங்களுக்காக அமெரிக்க ஜனாதிபதியை சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இலங்கை அரசையோ அல்லது இராணுவ அதிகாரியையோ இவ்வாறு சர்வதேச நீதிமன்றத்தின் முன் யாரும் அழைப்பதற்கு நாம் ஒருபோதும் அனுமதியளிக்க மாட்டோம். இதற்கான சகல எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம். - எனத் தெரிவித்துள்ளார். (சி)


**பாக்யா இசைப்பயிலகம்**

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு

நாளை (22.01.2008) செவ்வாய்க்கிழமை தைப்பூசத் திருநாளில் நாள் வகுப்புகள் மாலை 3.00 மணிக்கு நடைபெறும்.

அன்றையதினம் புதிய மாணவர்களும் சேர்ந்து கொள்ளலாம்.

★ மிருதங்கம் ★ ஒகன்
★ புல்லாங்குழல் ★ வயலின்
★ வாய்ப்பாட்டும் ★ சித்திரம்
பண்ணிசையும்

**பாக்யா காதிதாதிகள்**

121, K.K.S. வீதி, கொக்குவில்.

0773053129


## தீவிர ஆலோசனையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து ஏற்பாடுகளை மேற்கொள்வேன். அதன் பின்னர் அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றின்உரிய அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

இதேவேளை, இவ்விடயம் குறித்து ஜனாதிபதியின்சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸி[illegible] ராஜபக்ஷ இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இவ்வாரம் நடுப்பகுதியில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கை அரசுக்குக் கிடைத்துவிடும். அதனை அரசு முழுமையாக ஆராய்ந்து - ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வைக் காண்பதற்கான தீர்வினை அறிவிக்கும்.

2008 ஆம் ஆண்டு பூர்த்தியாவதற்கு முன்னர் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டுவிடும். பயங்கரவாதத்தை இல்லாது ஒழித்து, நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவே முப்படைகளின் தளபதிகளும் உறுதிபூண்டு முழு வீச்சுடன் செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் 60 ஆவது சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளன. இதில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி கலந்து சிறப்பிப்பார்.

இதேவேளை, நாடாளுமன்றம் குறுகிய காலத்திற்கு ஒத்திவைக்கப்படவும் கூடும். ஏனெனில், நாடாளுமன்ற அமர்வுகள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படுவதற்கான திகதிகளை ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார். - என்று கூறினார். (அ-சி)

## இடைக்காலத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான மாவை சேனாதிராஜாவும், இத் தேர்தலில் போட்டியிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்த இந்திரகுமார் என்பவரும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

மட்டக்களப்பில் 09 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த அரசு தீர்மானித்திருக்கின்றது. அங்கு ஆயுதக் குழுக்களின் அட்டகாசம் அதிகமாக இருப்பதால் தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் - சூழல்கள் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரும் மட்டக்களப்பிற்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. அண்மையில் ஐதேகட்சியின் உறுப்பினர் ஒருவரின் வீடு, மட்டக்களப்பில் இயங்கும் ஆயுதக் குழுக்களின் தாக்குதலுக்கு இலக்கானது. அதேபோல் அந்த உறுப்பினரின் சகோதரர் ஒருவரும் அண்மையில் மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அங்கு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் வாக்களிப்பதில் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறான அசாதாரண சூழ்நிலையின் மத்தியில் அங்கு தேர்தலை நடத்துவது அரசமைப்பின் 3 ஆவது சரத்தின்படி அடிப்படை மனித உரிமையை மீறும் செயலாகும். ஆகவேதான அங்கு தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதை நிறுத்துவதற்கும் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

அத்தோடு, இத்தேர்தல் தொடர்பாக இம்மாதம் 4 ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியற்றது என்று பிரகடனப்படுத்த வேண்டும். - எனவும் அம்மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)


**THE SCIENCE CORNER**

COLOCK TOWER LANE

BIOLOGY

2010 A/L

உயிர்ப் பல்வகைமை

ஆரம்பம் 22.01.2008 செவ்வாய் 3.00-4.30 P.M.

2008 A/L மீட்டல்

நுண்ணங்கி உயிரியல்

ஆரம்பம் 25.01.2008 புதன் 2.30-4.00 P.M

திரு.க.பொன் திவாகரன் T.P.222 9212.



புதிய பிரிவுகள்

CB Computer Academy

Station Road, Kondavil. 021-4590291

22.01.2008

**நாளை தைப்பூசம்**

இந்நன்நாளில் கணனி உலகில் அடியெடுத்து வையுங்கள்!

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளும் ஆரம்பம்!



**பெனர், பாடசாலை ரை அச்சிடலிற்கு..**

ஸ்கிறீன் பிறிண்ரிங் மூலம் பெனர், ரை , ரீசேட் போன்றவற்றை அச்சிடுவதற்கும் மற்றும் ஒவ் (f) செற் பிறிண்ரிங்கிற்கும்

துவாரகா மல்ரி ஸ்பொட் 537,பருத்தித்துறை வீதி, நல்லூர்

நோபிள் பிறின்ரேஸ் 103, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிமுத்து பர்ணாந்து செபமாலை

(பாதுகாப்புஉத்தியோகத்தர்,யாழ்.பல்கலைக்கழகம்)



ஊர்காவற்றுறை மேற்கைப் பிறப்பிடமாகவும் முதலாவது ஒழுங்கை ஈச்சமோட்டை யை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து பர்ணாந்து செபமாலை நேற்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி பர்ணாந்து - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் றோசா தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராவின் அன்புக் கணவரும் நியோரின், Rev.Sr.மெடோனா (திருச்சிலுவை கன்னியர் மடம், நுவரெலியா), ஜீசன்(யாழ்.மத்தியகல்லூரிமாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யூட்குமாரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் ஒழுங்கை,*
*11/1,ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.*

தகவல்: குடும்பத்தினர்.

## ஆள்வான் வன்னியசிங்கம் (ஜே.பி)

(முன்னாள் முகாமையாளர்-ப.தெ.வ.கூ.ச-தெல்லிப்பழை)

கரவெட்டி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆள்வான் வன்னியசிங்கம் நேற்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆள்வான்-வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் லட்சுமி மற்றும் கிருஷ்ணபிள்ளையின் சகோதரரும் கந்தப்பு-கங்கம்மா தம்பதியினரின் மருமகனும் பரமேஸ்வரியின் கணவரும் சசிகரன் (ஆய்வுகூட உதவியாளர், யாழ்.இந்து மகா வித்தியாலயம்),சுதாகரன் (கணக்காளர் ,ராயுடுல் கம்பனி -கொழும்பு), சர்வோதினி(எழுதுநர்,கட்டை வேலி-நெல்லியடி ப.நோ.கூ.ச),சதீஸ்கரன், சபேஸ்கரன் ஆகியோரின் தந்தையும் தயாநிதியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று(21.01.2008) திங்கட்கிழமை நண்பகல்12.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக சோனப்புஇந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சசி இல்லம்'*
*கரவெட்டி தெற்கு.*

தகவல்: வ.சசிகரன்(மகன்)

## திருமதி மரியம்மா யோசவ்

சூராவத்தையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரியம்மா யோசவ் (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இம்மனுவேல் யோசபின் அன்பு மனைவியும் ஜெயராணி,ஆன்திரேசா, ஜெயச்சந்திரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிறிஸ்ரி (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), அன்ரனிதாஸ், பிருந்தா(கனடா), ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (21.01.2008) திங்கட்கிழமை பிற்பகல்3.30 மணிக்கு சூராவத்தை புனித திரேசாள் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக் கத்திற்காக புனித இசிதோர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'தாசர் வாசம்'*
*சூறாவத்தை, சுன்னாகம்.*

தகவல்: கணவர்,பிள்ளைகள்.

## சின்னத்தம்பி கந்தசாமி



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி அவர்கள் நேற்று(20.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி -குஞ்சரம் தம்பதியினரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற சந்திராதேவியின் அன்புக் கணவரும் ஞானபாஸ்கரன் (சிரேஷ்ட உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்), நிகிலா(முகவர். LIC நிறுவனம்), மேகலா, அகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சோபிக்கா, சுதர்ஷன்,சித்திரவேல்,சுகிர்தரன் ஆகியோரின் மாமனாரும் தூரியன், அனனியன்,தாமிரன், சதுர்த்திகா,நிர்த்தனன், சுவஸ்திகன், சந்தோஷ் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று(21.01.2008) திங்கட் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தரோடை.*

தகவல்: க.ஞானபாஸ்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.